Registered as a Newspaper

# உதயன்

சஞ்சீவி

விலை ரூ. 60

பக்கங்கள் 16+8

சுடர் : 38
கதிர் : 99

ஞாயிற்றுக்கிழமை 05 மார்ச் 2023

மாசி 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### அமைச்சர் டக்ளஸை நிராகரித்து

# வடக்கு எம்.பிக்களுடன் மீனவர்கள் இன்று பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 5

வடக்கு மீனவர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக செயற்பட்டு வரும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை புறக்கணித்து ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து மீனவர்சார் பிரச்சினைகள் குறித்து இன்று கலந்துரையாடப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத்தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

»15

## 1.5 பில். டொலர் உலக வங்கி உதவி

கொழும்பு, மார்ச் 5

இலங்கைக்கு எதிர் வரும் 2 வருடங்களுக்காக உலக வங்கி 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க இணக்கம் வெளியிட்டுள்ளது. சர்வதேச

»15

முச்சந்தி முரளி






## கச்சதீவுத் திருவிழா நேற்றுடன் நிறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 5

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா சிறப்பாக நடைபெற்று நேற்று

»15

## இலங்கைக் கடற்படையினரின் ஆயுதங்கள் அச்சமூட்டுகின்றன

### இந்தியப் பக்தர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

இலங்கை கடற்படையினரின் ஆயுதங்களைக் காண்கின்றபோது எமக்குப் பயமாக இருக்கின்றது - இவ்வாறு தமிழகத்திலிருந்து வருகை தந்த 40 வயதான அனித்தா

»15

## கச்சதீவுத் திருவிழாவில் குறைபாடுகள் தாராளம்

### பாகுபாடுகாட்டப்பட்டதாக இரு நாட்டு பக்தர்களும் குமுறல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

கச்சதீவு பெருநாள் ஒழுங்கமைப்பு தொடர்பாக இந்திய மற்றும் இலங்கைப் பக்தர்களால்

»15

## எந்தத் தேர்தல் நடந்தாலும் வெல்லப்போவது நாமே!

### மார்தட்டுகிறார் பஸில் ராஜபக்ச



கொழும்பு, மார்ச் 5

நாட்டில் எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று எம்மால் ஊகிக்கமுடியவில்லை. ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றியடையும் - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள்

»15

## இது தேர்தல்காலம் அல்ல புராணம் பாடுகிறது ஐ.தே.க.



கொழும்பு, மார்ச் 5

நாட்டின் நிலைமையைத் தெரிந்து கொண்டும் தேர்தல் வேண்டும் என்று சிலர் பிடிவாதமாகச் செயற்படுகின்றனர். இது தேர்தல் காலம் அல்ல. அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை

»15

## மத்திய வங்கிக்கு ஐ.எம்.எப். பாராட்டு

கொழும்பு, மார்ச் 5

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி திட்டமிட்ட நடைமுறைக்கு

»15

## 9 நாள் மேயர் யார்?

### இன்று கூடுகிறது தமிழ் அரசு

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாநகரசபையின் மேயர் தெரிவு எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் யாரை மேயர்

»15

## உயர் நீதிமன்ற தீர்ப்பினை மதித்துச் செயற்படுவோம்

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 5

உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்கின்றோம். அதன்பிரகாரம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

»15

GTV Express
11KG மேல் 1KG க்கு
லண்டன் (UK) – 1350
பிரான்ஸ் – 2350
- 255, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- 81A, பொயிண்ட் பெட்ரோ வீதி, நெல்லியடி.
- A9, வீதி (கந்தசாமி கோவிலுக்கு முன்னால்) கிளிநொச்சி.
- 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
☎ +94 11 465 44 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசைப் பாதுகாக்கவே ஓ.எம்.பி அலுவலகம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போர்க்கொடி

**கிளிநொச்சி, மார்ச் 5**

**அரசாங்கத்தைப் பாதுகாக்கவும் சர்வதேசத்தை ஏமாற்றவும் உருவாக்கப்பட்ட அமைப்பே ஓ.எம்.பி அலுவலகமாகும். எனவே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஓ.எம்.பி அலுவலகத்துக்கு தகவல்களை வழங்கவேண்டாம் - இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத் தலைவி கதிர்காமநாதன் கோகிலவாணி தெரிவித்துள்ளார்.**

அண்மையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஓ.எம்.பி. அலுவலகத்தில் நீதி அமைச்சர் முன்னிலையில் விவரங்கள் திரட்ட முற்பட்டபோது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அடுத்தகட்டமாக கிளிநொச்சி கரைச்சி பிரதேசசெயலர் பிரிவில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விவரங்களைத் திரட்டும் பணிகள் ஓ.எம்.பி. அலுவலகத்தால் நேற்றுமுந்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. அதற்கும் எதிர்ப்பு வெளியிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஓ.எம்.பி. அலுவலகத்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக அறிகிறோம். உண்மையில் ஓ.எம்.பி. அலுவலகத்தால் எமக்கு நன்மை இல்லை என்றும் அவர்களால் நீதி கிடைக்கப்போவதில்லை எனவும் எம்முடன் போராடும் பெற்றோருக்கு விளக்கி வருகின்றோம். இந்த நிலையில், கிளிநொச்சி அலுவலகத்துக்கு அழைத்தால் எமது உறவுகள் செல்வதில்லை என்பதற்காக கிராம அலுவலர்களூடாக அலைபேசி மூலம் அழைத்து விவரங்களைத் திரட்டுகின்றனர். கிராம அலுவலருக்கு அஞ்சி சிலர் அங்கு சென்று பதிவுகளை மேற்கொள்கின்றனர்.

ஆனால் இதுபோன்ற செயற்பாடுகளுக்கு எமது உறவுகள் ஏமாந்து செல்ல வேண்டாம். அவர்களால் குறிப்பிட்ட தொகைப் பணம் வழங்கப்படும் என்று கூறுகின்றனர். நாங்கள் பணத்துக்காகப் போராடவில்லை. எமது பிள்ளைகளுக்கு நீதி கோரியே போராடுகின்றோம். அவ்வாறு பணம் கொடுக்கவும் இல்லை. பதிலாக பொருள்களையே கொடுப்பதாக அறிகின்றோம். ஓ.எம்.பி. அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள அழைக்கின்றபோது அங்கு மக்கள் செல்வதில்லை. ஆனால் நீதி அமைச்சின் மூலம் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவித்து மக்களை ஏமாற்றி அழைக்கின்றனர். நீதி அமைச்சின் கீழ் தான் ஓ.எம்.பி. அலுவலகம் உள்ளது என்பது பெரும்பாலான எமது உறவுகளுக்குத் தெரியவில்லை. இவ்வாறான செயலுக்கு எமது உறவுகள் துணைபோகக்கூடாது - என்றார். (ம-14,113)

# ஐ.எம்.எப். நிதி கிடைத்ததும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும்!

கொழும்பு, மார்ச் 5

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றதும் அத்தியாவசிய பொருள்களின் விலை மற்றும் சேவைக் கட்டணங்கள் ஆகியவற்றை குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிதி நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி தற்போது உயர்வடைந்துள்ளது. நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்தியவங்கி முன்னெடுத்த தீர்மானங்களால் இந்த முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. ரூபாவின் பெறுமதியை நிலையான தன்மையில் பேணும் பட்சத்தில் நிதி நிலைமையை உறுதிப்படுத்தமுடியும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இந்த மாத இறுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றதும் அத்தியாவசிய பொருள்களின் விலை மற்றும் சேவைக் கட்டணங்களை குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் பாரம்பரிய அரசியல் முறைமைகள் மற்றும் அடிப்படைக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையுமே தவிர குறைவடையாது- என்றார். (ச-இ)

# செப்ரெம்பர் வரை தடையின்றி நிலக்கரி

கொழும்பு, மார்ச் 5

மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை தடையின்றி நாட்டுக்கு கொண்டுவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இன்று நிலக்கரிக் கப்பலொன்று வரவுள்ளது. நிலக்கரிக்காக புதிதாக ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட நிறுவனங்களும் சேவையில் ஈடுபடவுள்ளன. இந்த நிலையிலேயே இலங்கைக்கு செப்ரெம்பர் மாதம் வரையில் தடையின்றி நிலக்கரி கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேர்தல் வாக்குரிமை மீறப்படின் விளைவு மோசமாக அமையும்!

## பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 5

உள்ளூராட்சித் தேர்தலை திகதி குறிப்பிடாமல் பிற்போடுவதற்கு மோசமான முறையில் அரசாங்கம் தலையீடு செய்து குழப்பம் விளைவிக்கிறது. மக்கள் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் இடமளிக்காதுவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் மோசமானதாகவே இருக்கும் என்பதனை அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணைக்குழு நேற்று (நேற்றுமுன்தினம்) தீர்மானிப்பதாக அறிவித்திருந்தது. இருந்தபோதும் தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பது தெளிவாகத் தெரிகிறது. வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படும் அபாய கட்டத்திலுள்ளது. வரையறைகளை அமைத்து, அதற்கமைய மீண்டும் வேட்புமனுக் கோருவதற்கே அதிக வாய்ப்பு காணப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெற்றால் தோல்வி ஏற்படும் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருக்கவேண்டியதில்லை. தேர்தலில் அரசாங்கத்துக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், அதனால் அரசாங்கத்தை கொண்டு செல்வதற்குத் எந்த தடையும் இதன்மூலம் ஏற்படப்போவதில்லை.

மக்களின் ஜனநாயக உரிமையை பயன்படுத்துவதற்கு இடமளிக்காவிட்டால், அதனால் ஏற்படும் விளைவு மோசமானதாக இருக்கும் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் - என்றார். (ச-இ)



# தேசியப் பாதுகாப்பை அச்சுறுத்தும் நிபந்தனையை முன்வைத்தது அமெ.

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 5

இலங்கையின் தேசிய பாதுகாப்பை பெருமளவில் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் வகையில், 'புலனாய்வுத் தகவல் பரிமாற்றல் மத்திய நிலையம்' ஒன்றை அமைப்பது உள்ளிட்ட நான்கு நிபந்தனைகள் இலங்கைக்கு அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திர மக்கள் கூட்டணி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:


அமெரிக்காவின் முக்கியமான பாதுகாப்பு அதிகாரிகள் அடங்கிய குழு கடந்த மாதம் மாதம் இலங்கைக்கு வருகை தந்தது. இவர்களை பரிசோதனை செய்ய விமான நிலைய சுங்கப் பிரிவினருக்குக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. அரச தலைவர்களுக்கு வழங்காத உயர் பாதுகாப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பென்டகன் பாதுகாப்பு அதிகாரிகள் நாட்டுக்கு ஏன் வருகை தந்தார்கள் என அரசாங்கத்திடம் பலமுறை கேள்வி எழுப்பினோம், ஆனால் இதுவரை அரசாங்கம் பொறுப்புடன் பதிலளிக்கவில்லை, தற்போது அமெரிக்காவின் சி.ஐ.ஏ. பிரிவின் பிரதானி வில்லியன் போர்ன் இரகசியமான முறையில் இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

இந்தக் குழு, நான்கு பிரதான நிபந்தனைகளை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளது.

இலங்கைக்கு கிடைக்கப் பெறும் சகல புலனாய்வுத் தகவல்களையும், அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் 'புலனாய்வுத் தகவல் பரிமாற்றல் மத்திய நிலையம்' ஒன்றை ஸ்தாபித்தல், விஞ்ஞான பூர்வ குடியகல்வு கட்டுப்பாட்டு முறைமையை இலங்கை விமான நிலையங்களில் ஸ்தாபித்தல், இலங்கையுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் வெளிநாட்டு தொலைபேசி வலையமைப்பு தொடர்பான தகவல்களை அமெரிக்காவுடன் பகிர்ந்துகொள்ளல் மற்றும் சோபா ஒப்பந்தத்தை விரைவாக கைச்சாத்திடல் உள்ளிட்ட நான்கு பிரதான நிபந்தனைகளே அவையாகும். இந்த நிபந்தனைகளால் இலங்கையின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகும் நிலை உருவாகும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கில் மாடுகளிடையே இலம்பித் தொற்று தீவிரம்

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

**கிளிநொச்சி, மார்ச் 5**

**வடமாகாணத்தில் மாடுகளிடையே இலம்பித் தொற்று தீவிரமாகி வருகின்றது. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த நோயின் தாக்கம் மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் பண்ணையாளர்கள் தமது கால்நடைகள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.**

இந்தத் தொற்றுத் தொடர்பில் மருத்துவர்கள் தெரிவித்ததாவது:

கொப்பளக்கட்டிகள் தோலில் ஏற்படுதல், கண்கள் அளவுக்கு அதிகமாகச் சிவத்தல் என்பன இந்த நோய்க்கான முதற்கட்ட அறிகுறிகளாக உள்ளன. மாடுகளிடம் இருந்து மாடுகளுக்கே இந்த நோய் தீவிரமாகப் பரவக்கூடியது. ஆடுகள் போன்ற கால்நடைகளுக்குப் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன. இலையான், நுளம்பு ஆகியவற்றாலும், மாடுகளின் உமிழ்நீர், சளி என்பன மூலமும் இந்த நோய் பரவும். வெற்றிலை (10), மிளகு, உப்பு, சக்கரை (தலா 1 கரண்டி) இவற்றை அரைத்து மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் கொடுப்பது நோய்க்கான முதற்கட்டத் தீர்வு - என்றுள்ளனர். (ம-14,113)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வ வழிபாடு நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படக் கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. உங்கள் பணிகளை குடும்பத்தினர் பகிர்ந்துகொள்வார்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படும் .

**கன்னி:** மனதில் அவ்வப்போது சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதியமுயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

# மூங்கிலாறில் தீவிரமாகின்றது சட்டவிரோத மணல் அகழ்வு!

## முறைப்பாடு வழங்கப்பட்டும் எந்தப் பயனும் இல்லை

முல்லைத்தீவு, மார்ச் 5

புதுக்குடியிருப்பு உடையார்கட்டுக் குளத்தின் கீழ் உள்ள மூங்கிலாறுப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

உடையார்கட்டுக் குளத்தின் கீழ் 4ஆம் வாய்க்கால் பகுதியிலுள்ள மூங்கிலாறில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன.

அத்துடன் ஆண்டுதோறும் விவசாய நிலங்களைப் பாதுகாக்க பல ஆயிரம் ரூபா செலவுசெய்து தடுப்பணைகள் மற்றும் வரம்புகளை நாம் அமைக்கின்றபோதிலும், சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுவோரால் அவை அழிக்கப்படுகின்றன.

இதன் காரணமாக வெள்ளம் தேங்கி வயல் நிலங்கள் அரிப்பெடுத்து ஆற்றுடன் கரைந்து சென்று நாசமாகின்றன.

மணலை அகழ்வது மட்டுமல்லாமல் மணல் அகழ்வோர் விவசாயிகளுக்கு அச்சுறுத்தலும் விடுத்து வருகின்றனர். இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே இவற்றைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். (ம-14,19)

# போதைக்கு எதிரான சேமிப்பு நிதியில் மாணவருக்குக் கற்றல் உபகரணங்கள்

சாவகச்சேரி, மார்ச் 5

போதைக்கு எதிரான சேமிப்பு வாரத்தில் கிடைத்த நிதியை 500 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கும் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினரால் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சமுர்த்தித் திணைக்கள ஏற்பாட்டில் வருடாவருடம் போதை ஒழிப்பு சேமிப்பு வாரத்தை அனைத்து சமுர்த்தி அலகினரும் மேற்கொண்டு அதில் கிடைக்கும் நிதியை மாணவர்களின் கல்வித் தேவைக்கு வழங்கி வருகின்றனர்.

அதற்கமைய கடந்த வருடம் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 60 கிராமஅலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்தி அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மேற்கொண்ட போதைக்கு எதிரான சேமிப்பு வாரத்தில் கிடைத்த நிதியை பொருண்மியம் நலிவடைந்த சமுர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்க ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம- 14,9)

# ஐ.எம்.எப். பணிப்புக்கமைய உயர்த்தப்பட்டது வட்டி வீதம்

## மத்தியவங்கி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்புக்கமைய இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையில் வட்டி வீதங்களை உயர்த்தத் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வட்டிவீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மத்தியவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான அண்மைய பேச்சுகளின்போது மீண்டும் 2.5 சதவீதத்தால் வட்டி வீதங்களை அதிகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. வங்கி வட்டி வீதங்களின் அடிப்படையிலேயே பணவீக்க வீதமும் உள்ளடங்கியுள்ளதால் அது நிதி உறுதித்தன்மையை ஏற்படுத்துவதில் பங்களிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

நிதிச் சட்டத்துக்கமைய வங்கிகளின் வட்டி வீதங்களை தீர்மானிப்பது மத்திய வங்கியாகும். அரசாங்கத்தால் வட்டி வீதத்தினைக் குறைக்கமுடியாது. நிதி ஸ்திரத் தன்மையைப் பேணுவதற்கான ஆயுதமாகவே மத்திய வங்கியால் வங்கிகளின் வட்டி வீதம் பயன்படுத்தப்படுகிறது.

இதற்கிணங்க நிலையான வைப்பு வட்டி வீதம் 15.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது. அத்துடன் மத்திய வங்கியால் கடனுக்காக அறவிடப்படும் வட்டி வீதம் 16.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் கீழ் பணவீக்கத்தை மேலும் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவும் இந்த வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படுகின்றன - என்றுள்ளது. (ச-இ)

# தவிசாளர் பதவியிலிருந்து ஜீ.எல்.பீரிஸ் நீக்கப்படுவார்

பொதுஜன பெரமுனக் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நீக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தின்போது இது தொடர்பில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனவும், கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தும் பீரிஸ் பங்கேற்கவில்லை எனவும் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அதன்படி சிவில் சமூகத்திலிருந்தே புதிய தவிசாளர் தெரிவு செய்யப்படவுள்ளார் எனவும், இன்னும் இரு வாரங்களுக்குள் நியமனம் இடம்பெறும் எனவும் சாகர காரியவசம் தெரிவித்தார். பெரமுனக் கட்சியின் தவிசாளராகச் செயற்படும் பீரிஸ், டலஸ் அணி பக்கம் தற்போது உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-14,44)

**வெளிநாடு செல்வதற்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்**

- Minor Education (Age limit 5 – 17 years) Both parent can go with the child
- Jobs in Canada and UK - வெளிநாட்டு வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. (Farm Workers / Registered Nurse / Construction Helper / Administrative officer / Care giver/ Personal support worker - home support etc....)

Visa Consultant

NALTC - 134, Adiyapatham Road, Thirunelvely. (Hotline: 0770385584)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இயற்கை வேளாண்மையில் விளைந்த

# உருளைக்கிழங்குக்கு சந்தை வாய்ப்பில்லை!

## பல லட்சம் ரூபாவைச் செலவழித்தும் பயனில்லை என விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்.மாவட்டத்தில் சொட்டு நீர்ப்பாசன முறையில், இயற்கை பசளையை மாத்திரம் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழக்குச் செய்கைக்கு போதிய சந்தை வாய்ப்பு இல்லாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விவசாயிகள் சார்பில் புத்தூர் நிலாவரையில் உள்ள "இராவணா" பண்ணையை ச்சேர்ந்த இராஜேந்திரன் பிரசாத் தெரிவித்ததாவது:

சொட்டு நீர்ப்பாசன முறையில், இயற்கைப் பசளையை மாத்திரம் பயன்படுத்தி பல லட்சம் ரூபா செலவு செய்து உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொண்டோம். எனினும், உருளைக்கிழங்கு விற்பனைக்கு சந்தை வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனால் பெருமளவில் பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ளோம். விவசாயத்திணைக் களம் இதற்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி தரும் நிலையில் இல்லை.

உருளைக்கிழங்குச்செய்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் பூச்சிகளின் தாக்கமும் அதிகமாகக் காணப்பட்டது. இது தொடர்பில் எங்களுக்கு விவசாயப் போதனா சிரியர்கள், உரிய ஆலோசனைகளையும் தரவில்லை - என்றார்.

(ம-14,23)


**CENTRE FOR HOLISTIC HEALING**

Walk-in-interview - 06.03.2023

**Diploma in Psychological Counseling**

Walk-in-interview for Diploma in Psychological Counseling will be held on 06.03.2023 at 9 a.m at the "Jaffna College Undergraduate Department, 464, Hospital Road, Jaffna".

Applicants with 3 Passes in G.C.E (A/L and with ordinary pass in English in G.C.E (O/L) can appear for the interview

**Contact :- 0777 370 494**
**077 9177 230**

**நிறைவாழ்வு மையம்**

**பெண்களிற்கான தொழில்முறைப் பயிற்சி ஆரம்பம்-08.03.2023**

நிறைவாழ்வு மையத்தினால் பெண்களிற்கான தொழில்முறைப் பயிற்சிகள் (தையல், Aariwork, கைவேலைகள், மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங், சமையல் வகுப்புகள்) எதிர்வரும் 08.03. 2023 புதுமுக மாணவிகளுக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பயிற்சிகள் கொக்குவில், இணுவில், சாவகட்டு மற்றும் சண்டிலிப்பாய் இலுள்ள நிலையங்களில் இலவசமாக வழங்கப்படும்.


**தொடர்பு:- 077 91 77 230**
**074 31 77 292**

(CS 1250)1-6



# மரண அறிவித்தல்

## சின்னத்துரை நடராசா



சிறுப்பிட்டி பூங்கொத்தையை பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நடராசா கடந்த (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தவமணி, ஆனந்தகுமார், பராசக்தி மற்றும் புவனேஸ்வரி, லோகேஸ்வரி, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் தவமணி, நவரத்தினம், பரமேஸ்வரி, தவராஜா ஆகியோரின் மைத்துனரும், பாரதி (கனடா), பகீரதி (லண்டன்), தர்சினி, பிரபாலினி, கோபிராஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எழிலன், கோபிநாத், நிசாந்தன், உமைபாலன், துசானா ஆகியோரின் அன்பு மாமனாரும், பாவரசி, நிகரன், திகழரன், சாயிரா, சாய்னா, சாயிராம், பவிரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து 3.30 மணி வரை Murtenstrasse 51, 3008 Bern, Switzerland இல் கிரியைகள் நடைபெற்று, தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இந்தத் தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி வடக்கு,**
**நீர்வேலி,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**கோபி (மகன்) - 41763282431**
**உமைபாலன் (மருமகன்) - 0779916589**
**நிசாந்தன் (மருமகன்) - 0779866684**

(CR 36828)1-6


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2023 யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பிரகாசிக்கும் DIMO

இலங்கையின் முன்னணி பல்வகை துறைசார்ந்த கூட்டு நிறுவனமான DIMO நிறுவனம், இவ்வாண்டு நடைபெற்ற 13ஆவது யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்குபற்றியிருப்பதுடன், தனது உலகத்தரம் வாய்ந்த இயந்திரவியல் வர்த்தக நாமங்கள் மற்றும் DIMO வினால் வழங்கப்படும் தீர்வுகளையும் காட்சிப்படுத்தியிருக்கிறது. இக்கண்காட்சி 2023 மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று 5 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்று கொண்டிருப்பதுடன், பெருமளவான பார்வையாளர்களையும் ஈர்த்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளுக்கு ஊக்கமளிக்கும் வளர்ச்சி பங்காளி எனும் வகையில் DIMO நிறுவனம், DIMO Academy for Technical Skills (DATS) மூலம் பல்வேறு பாடநெறிகளை வழங்குகிறது. BLACK + DECKER, Dewalt, Stanley, STIHL, Di-TEC Power Tools மற்றும் Home Appliances, DIMO Lumin Lighting தீர்வுகள், இலங்கையின் முதலாவது $CO_2$ உறிஞ்சும் ஸ்மார்ட் நிறப்பூச்சான Graphenstone, WD-40 உராய்வு நீக்கிகள், Ferri Automotive பாகங்கள் மற்றும் Michelin, BF Goodrich, Kumho, Sailun, MRF, Alliance, JINYU, COMPASAL, Montex, CAMSO டயர் வர்த்தகநாமங்கள் ஆகிய DIMO தயாரிப்புகளை யாழ். வர்த்தக கண்காட்சியில் காணலாம். Mahindra உழவு இயந்திரங்கள், SWARAJ உழவு இயந்திரங்கள், LOVOL அறுவடை இயந்திரங்கள், கலப்பை வகைகள், HomeBioGas தயாரிப்பு வகைகளை உள்ளடக்கிய DIMO Agribusinesses நிறுவனத்தின் கீழுள்ள DIMO விவசாய இயந்திரங்களும் இங்கு காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. DIMO நிறுவனம் அதன் TATA சேவைப் பொதிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் தொடர்பில் பார்வையாளர்களுக்கு தெளிவூட்டுவதோடு, உள்நாட்டில் ஒன்றிணைக்கப்பட்ட DIMO Battaவினையும் கண்காட்சியில் காட்சிப்படுத்துகிறது. சேவைப் பிரிவில், எஞ்சினுக்கான முழுமையான மாற்றியமைக்கும் தீர்வுகளை உள்ளடக்கிய DIMO Engine Care Services, டீசல் பம்ப் பழுதுபார்க்கும் சேவைகளை வழங்கும் DIMO Diesel Lab Services ஆகியனவும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.


































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூரில் பௌத்த வழிபாட்டுக்கு இடையூறு

# வினோ, கஜேந்திரனுக்கு மன்றால் அழைப்பாணை

**முல்லைத்தீவு, மார்ச் 5**

**குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்று தெரிவித்து பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோதே முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைத்து வழிபடுவதற்காக அதிகளவான பௌத்த துறவிகள் தென்னிலங்கையிலிருந்து வந்தனர். அதற்கு கிராமமக்களுடன் இணைந்து அரசியல் பிரமுகர்கள் எதிர்ப்பு வெளியிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

அதன்பின்னர் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்று தெரிவித்த பௌத்த தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக இந்த வழக்கு எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது. (ச-19,246)



## மாணவர்கள் பயணித்த கப்ரக வாகனம் விபத்து

### 11 பேர் காயம் நால்வர் இன்னும் சிகிச்சையில்

கிளிநொச்சி, மார்ச் 5

மாணவர்களை ஏற்றிச் சென்ற கப்ரக வாகனம் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளானதில் 11 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். இந்த விபத்துச்சம்பவம் பளை புதுக்காட்டு ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இடம்பெறவுள்ளது. அதை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டிக்காக பாடசாலை மாணவர்களை, கப் ரக வாகனம் ஏற்றிச் சென்றுள்ளது. இயக்கச்சிப் பகுதியிலிருந்து பளை நோக்கிப் பயணித்த வாகனம் புதுக்காட்டு சந்தியை அண்மித்து ஏ-9 பிரதான வீதியில் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து நிகழ்ந்தவேளை கப்ரக வாகனத்தின் பின்புறம் அமைக்கப்பட்ட பாதுகாப்புக் கூடாரம் வாகனத்திலிருந்து கழன்றதால் மாணவர்கள் வீதியில் விழுந்து விபத்துக்குள்ளாகினர். இதில் 11 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்த 11 மாணவர்களும் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் பளை மருத்து வமனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார். விபத்தையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பளை பொலிஸார், கப்ரக வாகன சாரதியைக் கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-14,113,9)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 5

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 78ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டுவிழா, இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கிலியன் மன்ற முற்றத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சி.டி.பி. வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் சுரமியா சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் பிரியதர்ஷினி கமல்ராஜ், ஊர்காவற்றுறை மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் தமிழரசி அறிவரசன், நல்லூர் பிரதேசசெயலக முகாமைத்துவ உதவியாளர் தயாரூபி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-14)

## பாதீனியப் பரவலால் விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

குப்பிழான், புன்னாலைக்கட்டுவனில் பல பகுதிகளிலும் பாதீனியச் செடிகளின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுகின்றதால் தாம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று பெரும்போக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குப்பிழான் தெற்கு மற்றும் புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதிகளில் விவசாய நிலங்கள், வீதியோரங்களில் பாதீனியம் பெரும் செடிகளாக வளர்ந்து காணப்படுகின்றது. பாதீனியச் செடிகளின் பரம்பலால் இந்தப் பகுதிகளில் பெரும்போகச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14,66)

## பொதுக்கூட்டம்

மாதகல் நுணசை வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவிருப்பதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (ம-14,66)

## நன்னீர்மீன் வளர்ப்புப் போர்வையில் புதுக்காட்டுக் குளத்தில் மணல் அகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 5

பளை, புதுக்காட்டுக் குளத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு எனும் போர்வையில் மணலகழ்வு இடம்பெறுகின்றது. இதற்கு பளை கமநல சேவை திணைக்களமும் துணைபோகிறதா? எனத் தெரிவித்து அந்தப் பிரதேச மக்களால்கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

நன்னீர் மீன்வளர்ப்புக்காக குறித்த குளம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது என காண்பித்து அதிகளவான மணல் அகழப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. உள்ளூர்த் திணைக்களங்களுக்கு அறிவித்தல் ஏதும் வழங்கப்படாது கொழும்பிலுள்ள அதிகாரிகளால் குறித்த பணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கமநலசேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான குறித்த குளத்தின் அபிவிருத்தி தொடர்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை என கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். மண்ணகழ்வுக்கு புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என மணல் அகழ்வில் ஈடுபடுவோரால் தெரிவிக்கப்படுகிறது. இந்த அனுமதி சட்டத்துக்கு முரணானதாகும். அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் இந்தக் கொள்ளைச் சம்பவத்துக்கு பளை கமநல அபிவிருத்தித் திணைக்களமும் துணைபோகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த மணல் திருட்டு உடன் நிறுத்தப்படவேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜனாதி பதிக்கான மனு, பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக நிர்வாக அலுவலரிடம் கையளிக்கப்பட்டது. (ச-113)

## நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும்

யாழ்ப்பாணம், மார்ச் 5

செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு. திருமுருகன் எழுதிய திருக்கேதீச்சர இலக்கியம் நூல் வெளியீடும், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் முன்னாள் தலைவர் கந்தையா நீலகண்டன் ஞாபகார்த்த நினைவுப் பேருரையும், நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மீகச் சுடர் ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்கள நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி ச.சர்வராஜா "யாழ்.நீர் வழங்கல் மீதான ஆபத்துக்களும் வாய்ப்புக்களும்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். அத்துடன் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். (எ-14,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அத்துமீறல் தொடர்கதையா?

"இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களும், மீன்பிடிச் சாதனங்களும் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படவேண்டும். அவ்வாறு அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களுக்குத் தண்டனை வழக்கப்படும்போது மனித நேயத்துடன் அவர்கள் அணுகப்படவேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளனர் தமிழக மீனவர்கள். கச்சதீவு அந்தோனியார் திருத்தலத் திருவிழா நேற்றுமுன்தினம் மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, நேற்று நிறைவடைந்தது. நேற்றுமுன்தினம் மாலை இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பிலும் இதர பிணக்குகள் தொடர்பிலும் இரு தரப்பினரும் பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். இதன்போதே இந்தக் கோரிக்கை இந்திய மீனவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடாதீர்கள், றோலர் படகுகளால் இலங்கைக் கடல்வளத்தை அழிக்காதீர்கள், இலங்கை மீனவர்களின் பொருளாதாரத்தைச் சிதைக்காதீர்கள், ஏற்கனவே பொருளாதாரத்தில் நொந்து நலிந்துபோயுள்ள இலங்கை மீனவர்களை வாழவிடுங்கள் என்ற கோரிக்கை வடமாகாண மீனவர்களால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அந்தக் கோரிக்கைகளை அப்பால் வைத்துவிட்டு, 'அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை நியாயமாக நடத்துங்கள், அவர்களை உடன் திருப்பியனுப்புங்கள்' என்றவாறாக முன்வைக்கப்படும் இந்தக் கருத்தானது, 'தமிழக மீனவர்கள் அத்துமீறுவதை இனியும் நிறுத்தப்போவதில்லை. அவர்கள் தமது பிரதான மீன்பிடிக் களமாக வடக்குக் கடற்பரப்பையே கொள்ளப் போகின்றனர்' என்ற செய்தியதைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றதே அன்றி வேறொன்றுமில்லை.


இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பானது பொதுவானதாக இருந்தாலும், இதனால் மிக அதிகமாகப் பாதிப்புக்களைச் சந்தித்தவர்கள் மீனவர்களே. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் அதாவது புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படாத காலத்தில் ஒருவாறாகவும், புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர் இன்னொருவாறாகவும் என அவர்கள் தொடர்ச்சியான இழப்புக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். வடமாகாண மீனவர்களின் இந்த சபிக்கப்பட்ட வாழ்க்கைக்கு பிரதான காரணகர்த்தாக்களாக தற்போது இருப்பவர்கள் தொப்புள்கொடி உறவுகளான தமிழக மீனவர்கள் என்றால் அது எவ்வளவு பெரிய அபத்தம். 'தாயும் பிள்ளையும் ஒன்றாகினும், வாயும் வயிறும் வேறு' என்பார்கள். இந்தப் புரிதலை தமிழக மீனவர்கள் பொதுப்புரிதலுடன் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போது சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக தமிழகத்தில் மீனவர்களின் குரல்கள் ஓங்கி ஒலித்தது. எமது நெருக்குவாரங்களை – நாம் சந்தித்த பொருளாதாரப் பேரிடரை நன்கு அறிந்தவர்களாக அவர்கள் இருந்தார்கள். இதனால்தான் பல்வேறு காலகட்டங்களிலும் தமிழக மீனவர்கள் எமக்காக நின்றார்கள். அவரின் ஆதரவும் ஈழத்தமிழர்களுக்காக வெளிப்படுத்திய குரலும் காலக்கண்ணாடியாக தமிழர் தாயகத்தின் நிலையை, உள்ளதை உள்ளபடியாகப் பறைசாற்றியது. இது இப்படியிருக்கையில் எமது துன்பங்களில் பங்கெடுத்தவர்கள், எமக்காக நின்றவர்கள், எம்மைத் தேற்றியவர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக எம்மைப்பற்றி அறிந்தவர்கள் இன்று எமது வாழ்வையே சூறையாடிச் செல்வதென்பது எந்தவகையில் தகும்?

உணவை உண்ணக்கொடுத்துவிட்டு அதில் மண்ணைப் போடும் இந்தச் செயற்பாட்டை தமிழக மீனவர்கள் உடன் கைவிடவேண்டும். ஒரு சிறிய கோட்டுக்கு அருகில் அதைவிடப் பெரிய கோடொன்றை வரையும்போது அந்தச் சிறியகோட்டின் புலப்பாடு எவ்வாறு மங்கிப் போகுமோ, அவ்வாறு தமிழக மீனவர்கள் முன்னொரு காலத்தில் செய்த உதவிகளை, அவர்கள் தற்போது செய்கின்ற உபத்திரவங்கள் மங்கச்செய்து வருகின்றன என்பதே உண்மையும் யதார்த்தமும். இந்த நிலைமை நீடித்துத் தொடர்வதால் ஏற்படும் புகைச்சலும் பகையுணர்வும் தமிழக மீனவர்களுக்கும் நல்லதல்ல; ஈழத் தமிழர்களுக்கும் நல்லதல்ல.

நாளொரு நல்வார்த்தை

"எனக்கு ஒரு மரத்தை வெட்ட எட்டு மணி நேரம் தந்தால் அதில் ஆறு மணி நேரம் கோடரியை கூர்மைப்படுத்துவேன்" – **ஆபிரகாம் லிங்கன்**




# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிக்க அழுத்தம் வழங்குங்கள்!

## ஐ.நா.விடம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 5

சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கை அரசாங்கம் திருத்தியமைக்க வேண்டும். இதனை ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் மீளாய்வுக்குழு வலியுறுத்தவேண்டும் என்று 'சிவிகஸ்' சர்வதேச சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின் கீழ் இயங்கும் உபகட்டமைப்பான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பில் மீளாய்வு செய்யும் மனிதஉரிமைகள் மீளாய்வுக்குழுவின் 137ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் ஆரம்பமாகியது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான மீளாய்வு எதிர்வரும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

3 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த மீளாய்வுக்குழுவின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி மனிதஉரிமைகள் அமைப்புக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இலங்கை தொடர்பான தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன.

அதன்படி உலகளாவிய ரீதியில் சிவில் அமைப்புகளின் செயற்பாடுகள் மற்றும் சிவில் சமூக இடைவெளியை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் சிவில் சமூக அமைப்புகளின் கூட்டிணைவான சிவிகஸ் அமைப்பும் ஐ.நா. மனிதஉரிமைகள் மீளாய்வுக்குழுவிடம் இலங்கை மனிதஉரிமைகள் நிலைவரம் குறித்து தமது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:

கடந்த 40 வருடங்களில் இந்தக் கொடிய சட்டமானது பல்வேறு தரப்புகளுக்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக யுத்த காலத்தில் ஏராளமான தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மிக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இன்றும் சுமார் 50 தமிழ் அரசியல் கைதிகள் இந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மறுபுறம் உயிர்த்தஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து இந்தச் சட்டம் முஸ்லிம்களுக்கு எதிராகத் திரும்பியது.

ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் இந்தச் சட்டத்தைத் தமக்கு விரோதமானவர்களுக்கு எதிராகவும் அல்லது தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான கருவியாகவுமே பயன்படுத்தி வருகின்றன.

இலங்கையில் கடந்த ஆண்டு பெருமளவில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோர் பலர் இந்தச் சட்டத்தினூடாக ஒடுக்குமுறைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்துவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களும் பல்வேறு அடக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். போராட்டங்களுடன் தொடர்புடைய தரப்பினர் பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட மிகமோசமான சட்டங்கள் ஊடாக இலக்கு வைக்கப்படுகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய சூழ்நிலையை உறுதிசெய்யும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள ஐ.நா. மனிதஉரிமைகள் மீளாய்வுக்குழு பரிந்துரைக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

நாளை 06.03.2023 திங்கட்கிழமை மாசி 22

சுபநேரம் : 12.25 - 01.55

ராகுகாலம் : 07.55 - 09.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 08 . 1941 | 04 . 03 . 2023 |



## வேலுப்பிள்ளை நாகராசா

**(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி)**

மீசாலை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராஜா அவர்கள் நேற்று (04.03.2023) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை செல்லாச்சி தம்பதிகளின் மகனும், பவளக்கொடியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், கேதீஸ்வரன் (ஆசிரியர்- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), அனுசா (அவுஸ்ரேலியா), ரேவதனி, வாசுகி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகிலா (ஆசிரியர்- நாவற்குழி மகா வித்தியாலயம்), முருகானந்தன் (பொறியியலாளர்- அவுஸ்ரேலியா), பிரணவன் (உதவிப்பதிவாளர்- பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மனோராஜ் (இலண்டன்) ஆகியோரின் மாமனாரும், கிருஷாந், லக்சயன் (மாணவர்கள்- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), தணிகேசன் (மருத்துவர்-அவுஸ்ரேலியா), தாரணி (மருத்துவ பீட மாணவி- அவுஸ்ரேலியா), காயத்திரி (கலைப்பீட மாணவி- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) கஜானன் (மாணவன்- கொக்குவில் இந்துக்கல்லூரி), சோமியா, கபீசன் (இலண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 205 0406**

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 07 . 1948 | 05 . 02 . 2023 |



**கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி**

## அமரர் சோமசுந்தரம் நாகம்மா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (05.03.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் புங்குடுதீவு கண்ணகைபுரம் தீர்த்தக்கரை யிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் (07.03.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**
**மகன் : சோ. கேதீஸ்வரன்** (ஈகிள் ஹாட்வெயார் - யாழ்ப்பாணம்)
**மகன் சோ. ஜெகதீஸ்வரன்** (சிற்றி ரான்ஸ்போட் - கொழும்பு)
**மகன் : சோ. பிரகதீஸ்வரன்** (சிற்றி ஹாட்வெயார் & ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்)
**இல 87/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8678**

(CS 1234) (3/6)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 - 06 - 1961 | 03 - 03 - 2023 |



## குமாரசாமி செல்வராஜா (செல்லா ஆசாரி)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் கற்பகபுரம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி செல்வராஜா (செல்லா ஆசாரி) அவர்கள் கடந்த (03.03.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி (ஆசாரி) மற்றும் தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (ஆசாரி) இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் உஷாராணி ஆகியோரின் அன்புக் கணவரும் இராமகிருஷ்ணன் (ஜேர்மனி), சாந்தி (கொழும்பு), வசந்தி (கொழும்பு), விஜயகுமார் (யாழ்ப்பாணம்), மனோகரன் (கொழும்பு), ஶ்ரீதரன் (வதுனன் ஜுவல்லறி - மன்னார்), பிரபாகரன் (நஜிந்தா ஜிவல்லறி வவுனியா), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிஷாந்தன், யோகேஸ்வரன் (சுவிஸ்), கேமன்ராஜ் (நஜிந்தா ஜுவல்லறி வவுனியா), டிலானி (ஜேர்மனி), டிலான் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பையா, செந்தில்நாதன் ஆகியோரின் மைத்துனரும், ஜெரினின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல். 2.30மணியளவில் கற்பகபுரம் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கற்பகபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 514 1448**
**076 618 1864**

**தகவல்:**
**பிரபாகரன்**
**(நஜிந்தா ஜுவல்லறி வவுனியா)**

(CS 0086) (3/6)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 11 - 1932 | 04 - 03 - 2023 |



## வல்லிபுரம் சிவசுப்பிரமணியம் (கந்தசாமி)

**(ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி)**

யாழ். புலோலி தெற்கு முத்துவாசாவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு வல்லிபுரம் சிவசுப்பிரமணியம் நேற்று (04.03.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - மீனாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பூரணம் சிவசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு கணவனும், காலஞ்சென்ற திருமதி திருப்பதி கோபால், திரு. சண்முகராஜலிங்கம் (ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி), திருமதி திருத்தேவி நடராஜா, ஆகியோரின் அன்பு சகோதரரும், நிரஞ்சனா (ஆசிரியை - அவுஸ்ரேலியா), Dr. பூபாலன் (மருத்துவர் - அவுஸ்ரேலியா), யமுனா (ஆசிரியை, மெதடிஸ்ட் பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகுமார் (அவுஸ்ரேலியா), கிருபாகரன் (ஆசிரியர்-வடமராட்சி மத்திய மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகலிங்கம் கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் (முன்னாள், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட, பீடாதிபதி) காலஞ்சென்ற நாகலிங்கம் கனகநாயகம் (தேசிய திரைப்படக்கூட்டுத்தாபன அதிகாரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனுஷன், கஜீவன், அஷ்விந்த், ரூபன்பாரதி, அனிஷாரோஸ் ஆகியோரின் அன்புக்குரிய பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கருகம்பன் (மந்திகை) மயானத்தில் இடம்பெற உள்ளது. இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible] வீதி,**
**புலோலி தெற்கு,**
**புலோலி.**

**தகவல்:**
**யமுனா கிருபாகரன்**
**நிரஞ்சனா பாலகுமார்**
**மகள் : + 94 (0) 77364 5719**
**மகள் : + 61 448 901 032**

(CS 22929) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 31 . 03 . 1941

மறைவு 03 . 02 . 2023

## அமரர் தம்பிராசா மகாலிங்கம்

(திதி: பூர்வபக்க திரயோதசி)


கனிவான பேச்சாலும் கண்ணியமான நடையாலும்
ஓராயிரம் மனங்களை கவர்ந்து
பண்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்து
தொப்பையப்பன் பிள்ளையாரின் தொப்பையுள்ள தொண்டனாய்
தனக்கான கடமைகளை சரிவரவே நிறைவேற்றி
எமைப்பிரிந்து சென்று திங்கள் ஒன்று ஆனாலும்
உங்கள் பிரிவை ஏற்க எம் மனம் மறுக்கிறது
இருப்பினும். உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**இல.18, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs.21269) (2.6)

**குடும்பத்தினர்**

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு : 06.03.2011

## அமரர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம்

(ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி, பிரதேச செயலகம் – உடுவில்)

எமக்காகவே வாழ்ந்த எமது அருமை அப்பா
அன்பையும், பண்பையும் தந்து வழிகாட்டி நின்றீர்கள்
எமது உயர்வுக்காய் எந்நாளும் அயராது உழைத்தீர்கள்
கண்ணியம் மிக்கவராய் வாழ்ந்து காட்டினீர்கள்
நெஞ்சம் ஏங்குகின்றது வலிகளைச் சுமந்து
தனிமையில் அழுகின்றோம்- நாம்
காலமெல்லாம் உங்கள் நினைவுகளோடு
கலங்கி நிற்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 27775) (3/6)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி





கடந்த 03.02.2023 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சுந்தரம்பிள்ளை தனபாலசிங்கம்

(பூநகரிச் சந்திரன்)

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், கிரியைகளும் இன்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் கலந்துவிட்ட அன்னாரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனைகளிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்தியோர்க்கும், தொடர்பாடல் மூலங்களினூடாக அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்தோருக்கும், பதாகைகள் மூலம் தமது அஞ்சலியை வழங்கியோர்க்கும், இறுதி நிகழ்வுகள் தொடங்கி இன்றுவரை எமக்குப் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கியோர்க்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

[illegible] வீதி,
சாவகச்சேரி.

(cr.39374) (2.6)

**குடும்பத்தினர்**
**077 161 9260**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## வான் விற்பனைக்கு

**HDH 200 PD - XXXX** வான் விற்பனைக்குண்டு

தொடர்பு: **077 773 0567**

## மணமகன் தேவை

1995 ஆம் ஆண்டு பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச தொழில்புரியும் BSc பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை.

**077 233 6267**

## VACANCY FOR THE POST OF DIRECTOR OF JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

Applications are invited from suitable candidates for the above post.
The Applicants must meet the following requirements:

**Ideal candidate will**

- possess a degree from a university recognised by the University Grants Commission with a post graduate qualification. Applicants with high academic achievements including a degree in Engineering, Education or related fields will have an added advantage
- be a communicant member of a denomination which is a member of the National Christian Council of Sri Lanka
- possess the ability, personality and calibre to command the respect of the community.
- possess excellent leadership qualities
- be physically fit and in good health.
- preferably be below the age of 50

Salary is negotiable. An official residence will be provided

Applications should be sent by registered post to reach before 31.03.2023 to the following address:

**The Chairperson**
**Board of Directors of Jaffna College**
**Jaffna College**
**Vaddukoddai.**

(cs 1204) (2.6)

## கடை வாடகைக்குண்டு

நாச்சிமார் கோவிலடி, K.K.S. வீதிக்கு மிக அருகில் (சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்) கடை வாடகைக்கு உண்டு.

**077 536 1370**

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை சங்கரத்தையில் 3 பரப்புக்காணியுடன் புதிய வீடு விற்பனைக்கு.

**Sailakshan Uthayasoorian: 077 221 5531**

## விற்பனைக்கு

மட்டுவில் பாடசாலைக்கு அண்மையாக 13 பரப்புக்காணி விற்பனைக்கு.
மீசாலையில் 12 பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்கு

**Vijenthan Kunaradnam: 077 227 6173**

## காணி விற்பனைக்கு

நீர்வேலி மாசுவன் சந்தியில் 2 1/4 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு.
கிணறு மற்றும்மலசலகூடம் என்பவற்றுடன் அமைந்துள்ளது.

**076 755 2253**

## மின்பிறப்பாக்கி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள யப்பான் தயாரிப்பான Yamaha மின்பிறப்பாக்கி (டீசல்) 9 KVA சிறிது காலம் பாவித்தது விற்பனைக்குண்டு.

**077 734 4074,075 039 6176**

## பணியாளர் தேவை

சாவகச்சேரியில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 782 1896, 077 793 8221**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய்

**077 334 1281**

## CLASSES

**A/L** மாணவர்களுக்கான **Physics** (பௌதீகவியல்) **English medium** தனியாகவோ / குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்பு: **077 227 8921**

## விற்பனைக்குண்டு

பஸ்ரியன் சந்திக்கு அருகில் கண்டி றோட்டில் கட்டடமும் கூரையும் விற்பனைக்குண்டு.

**077 691 3440**

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை Galle Road இற்கு அருகில் Land Side இல் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் Apartment இல் 2 Bedrooms, 3 Bed rooms வீடு விற்பனைக்குண்டு.

**076 290 1111**

## வீடு விற்பனைக்கு

தெஹிவளையில் Galle Road அருகில் புத்தம் புதிய 3 Bed room Apartment வெளிநாடு செல்ல இருப்பதால் உறுதியுடன் விற்பனைக்கு. தரகர் வேண்டாம்.

**077 522 2613**

## மணமகன் தேவை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸில் குடியுரிமையுடைய இரண்டு ஆண் குழந்தைகளின் தாயாரான (07.11.1988) அழகான பெண்ணிற்கு பிரான்ஸில் வசிக்கும் பெற்றோர் உயர் சமூகத்தில் தகுந்த வரனை உள்நாட்டில், வெளிநாட்டில் தேடுகின்றனர்.

**Whatsapp :- +33 75 32 374 08**

## உடனடி விசாக்கள்

France மற்றும் Germany நாடுகளுக்கு உடனடி Working Visa பெற்றுத்தரப்படும்.

**077 594 7334**

## Success Story

**CONGRATULATIONS**



**Thank You So Much For This Opportunity!!!**

Thank you for your unwavering support and invaluable assistance in helping us secure our visas for Canada. Your expertise and guidance made the visa process a breeze, and we are deeply grateful for your efforts in ensuring all necessary documents were in order and procedures were properly managed.
We are thrilled that my son will be able to continue his higher studies in Canada, and that is all thanks to your hard work. Your dedication to helping us is truly appreciated.

Special Thanks ;
**Mr.Clement Perera**

Consolidated Academic Lanka



# தாய் - தந்தை - பிள்ளைகள் ஒன்றாக கனடா செல்வதற்கான வாய்ப்பு!!!

**அனைத்து கட்டணங்களும் விசாவிற்கு பின்**

- ☑ பிள்ளைகளின் வயது 04 முதல் 17 வயதிற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.
- ☑ பிள்ளைகளுக்கு மற்றும் பெற்றோருக்கு ஆங்கில அறிவு அவசியமில்லை.
- ☑ பெற்றோரின் வயது அல்லது கல்வித்தகைமை பாதிக்கப்படாது.
- ☑ கனடா அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட சொத்துக்கள் மட்டுமே தேவை.
- ☑ பிள்ளைகள் தங்களது கல்வியை டொறொன்டோ (Toronto) நகரில் தொடர முடியும்.
- ☑ கனேடிய சட்டதிட்டத்தின்படி பெற்றோருக்கு வேலை செய்ய அனுமதி உண்டு.

**வயது 4 - 17 வரை**

**மேலதிக தகவல்களுக்கு அலுவலக நேரத்தில் அழைக்கவும் : ☎ +94 112 890 692 (தமிழ்)**

(அலுவலக நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மற்றும் சனிக்கிழமை மதியம் 2.00 மணி வரை)

ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் அழைக்க : **0777 788 732 (Whatsapp)**

**Consolidated Academic Lanka (Private) Limited**

No.22-B, Station Lane, Nugegoda.

ceo@academiclanka.com / info@academiclanka.com    www.academiclanka.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,
பாண்டியந்தாழ்வில்
ஒரு பரப்பு காணி
கிணறுடன்
3 Room 2 bath
புதிய வீடு
விற்பனைக்கு

0772719404
0741915680

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொலைத்தொடர்பு சேவை வழங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு Intercom, PABX துறையில் நன்கு தேர்ச்சி பெற்ற, தொழில்சார் அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. அத்துடன் Net working CCTV Camera தொடர்பான முழுமையான தொழில்சார் தேர்ச்சி மற்றும் அனுபவம் இருந்தால் மேலும் விரும்பத்தக்கது.

CS 12274,6

071 143 3585

## மரண அறிவித்தல்



### ஸ்ரீமதி மகாலக்ஷ்மி

கீரிமலை நகுலேஸ்வரம் தியாகராஜக்குருக்கள் புவனேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வி ஸ்ரீமதி மகாலக்ஷ்மி அவர்கள் நேற்றுமுன்தினம் 3.3.2023 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அன்றைய தினமே சித்தங்கேணியில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
லக்ஷ்மி நாராயணக்குருக்கள்
சிவாஜினி (ராஜி, சகோதரி),
சித்தங்கேணி
0772437747, 0773027231

(CS1229)(3/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
22 • 10 • 1933



இறப்பு
27 • 02 • 2023

### திருமதி லீயோ யோசப் றூபி மொனிக்கா (றூபி அன்ரி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மத்திய கிழக்கு வீதி, குருநகர் மற்றும் சுவாமியார் புதுவீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீயோ யோசப் றூபி மொனிக்கா (றூபி அன்ரி) கடந்த (27.02.2023) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் - முத்தம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான யோசப் - செல்வரட்ணம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற யோசப் லீயோ அவர்களின் பாசமிகு மனைவியும், இலங்கேஸ்வரி, இலங்கேஸ்வரன், விமலேஸ்வரி, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு நிறை தாயாரும், வில்வராஜசிங்கம், பரமேஸ்வரி, ஜீவாதாஸ், ஜுலியட் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான அனெக்கிலற், அல்வீனஸ், திரேசா மற்றும் கிறேஸ் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வில்மட் ஜோசப் அவர்களின் மைத்துனியும், அஜந்தி, அஜந்தன், அன்றிக், நிறஞ்சனா, கிளவ்டியா, எலோடி, எலிசன், சோனியா, செறேனா, எடிசன், சமிதன் ஆகியோரின் பேர்த்தியும், ஒஷேனா, ஜன்ஸ்ரீன், எல்றோய் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (06.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/1208)4,6

லியோ அன்ரு - 076 537 5968,
லியோ லோகேஸ்வரன் - 077 070 5233
அன்ரன் வில்வராஜசிங்கம் - 077 6179122
எடிசன் - 077 844 8741

## மரண அறிவித்தல்

மலர்வு
31 • 07 • 1943



உதிர்வு
04 • 03 • 2023

### செல்லையா குகதாசன் (J.P)

(ஓய்வுபெற்ற செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை)

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.119, செல்லர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குகதாசன் நேற்று (04.03.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா நாகம்மா தம்பதியரின் மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பாலசிங்கம், தில்லைநாதன், தணிகாசலம், கமலாதேவி, குஞ்சிதபாதம், பூவிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தில்லைவிநாயகம் (பிரசித்த நொத்தாரிசு) மற்றும் இராஜகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


119, செல்லர் வீதி, நல்லூர்.
021 221 9590

தகவல்:
குடும்பத்தினர்

(ac 1222) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 - 01 - 1937



மறைவு
04 - 03 - 2023

### சின்னத்தம்பி இரத்தினசிங்கம் பசுபதி

(ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசியர் )

தொண்டமானாறு சந்நிதி வீதியைப் பிறப்பிடமாகவும் மீசாலை சிற்றம்பல வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினசிங்கம் பசுபதி (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்) நேற்று (04.03.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும் - கண்ணகையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், அகிலா (ஆசிரியை, மு/வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம், முல்லைத்தீவு), Dr. அச்சுதன் (DMO பிரதேச வைத்தியசாலை வரணி), பிரமிளா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசராசா (வள்ளிபுனம்), Dr. வினோதா (MO, PSY ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி), ஈஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கணேசன், சண்முகதாசன், இரத்தினசபாபதி, மற்றும் சிறிதரன் (கனடா), மகாலட்சுமி (தொண்டமானாறு), காலஞ்சென்ற தியாகராசா, குலமணி, வரதலட்சுமி (கனடா), இரகுநாதன், ஞான பண்டிதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீர்த்தனன் (மருத்துவ பீடமாணவன், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), அமிழ்தன், பிரணவன், ஆர்த்திகன், ஜனந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சிற்றம்பலம் வீதி, மீசாலை வடக்கு, மீசாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

தகவல்:
Dr. ப. அச்சுதன் (மகன்)

(CS 23321) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WE ARE HIRING

JOIN US

**LET'S JOIN OUR REPUTED FINANCE COMPANY IN SRILANKA !**

**JOB VACANCY OPEN POSITION**

- ✓ BRANCH MANAGERS – LADIES (EXPECTING 02 YEARS EXPERIENCE IN BANK /FINANCE / INSURANCE)
- ✓ ZONAL CO-ORDINATOR – NORTHERN ZONE
- ✓ BRANCH UNDERWRITERS.
- ✓ CO-ORDINATOR CUM SECRETARY FOR AGM - LADIES

**SKILLS & RESPONSIBILITES :**

- ✓ Completed advance level.
- ✓ Academic qualifications
- ✓ Professional qualifications
- ✓ Written and verbal communication skills in English & IT knowledge. (prefer to Sinhala language)

- If you have interested in this opportunity ,contact through this below number.
- CONTACT TO : 0772242549.
  0778910984
  0768980984

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 05 . 1982

மறைவு 05 . 03 . 2008



**செல்வன் இராசேந்திரம் கருணாகரர்**

(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – வவுனியா)

ஆண்டுகள் பல ஓடினாலும்
உங்கள் நினைவுகள் மாறாது மகனே
இறுதிவரை துணையிருப்பாய் என்று எண்ணியிருந்தோம்
எங்களைப் பாதியில் பரிதவிக்கவிட்டு ஓடிமறைந்தாயோ
அன்பான உன் வார்த்தை அயராது
எங்கள் செவியில் ஒலிக்கிறது மகனே

சதுமலை தெற்கு, மானிப்பாய். (CS 45376) (3/6) உன் பிரிவால் வாடும் பெற்றோர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 05 - 1945

மறைவு 01 - 03 - 2023



**திருமதி குணரத்தினம் கமலாதேவி**

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சங்கானை தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் கமலாதேவி கடந்த (01.03.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - இரசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், குணரத்தினத்தின் அன்பு மனைவியும், தயாளினி (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), பாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், வேணுகோபால் (லண்டன்), சசிகலா (லண்டன்), ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கேசிகா, ஜெதுகுலன், தோகுலன், லக்சியா, தரணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தேவாலய வீதி, சங்கானை. (CS 12401)(3/6)

## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்து

Happy Birthday

இலைமறை காயாய் மிளிரும்
**இளங்கவிஞன்**
**இ.த.ஜெயசீலன் ஐயாவின்**
**50 ஆவது பிறந்தநாளான இன்று**
நல்லூரான் அருள்பெற்று நலம் வாழ
வாழ்த்துகின்றோம்

**மனோகரன் குடும்பம்.**

## பழைய இரும்புகள் (உருக்குத்துண்டுகள்)

ஹெவி மெல்ற்றிங் ஸ்கிராப் (HMS) மற்றும் லைற் மெல்ற்றிங் ஸ்கிராப் (LMS) ஆகியவற்றை நாங்கள் வாங்குகிறோம்.

உருக்குத்துண்டுகள், பழைய இரும்புத்துண்டுகள் மற்றும் தகரங்கள் கொள்வனவு செய்யப்படும்.

**சிறப்பம்சங்கள்**

- அதிகபட்ச விலை
- விரைவான சேவை
- விநியோகிக்கப்படும் இடத்தில் உரிய தொகை பணமாக கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0764 452 866 / 0774 533 2226

## சமையற்காரர் தேவை

புங்குடுதீவில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலய உணவகம் ஒன்றுக்கு இந்தியப் பாணியில் சமையல் செய்யக்கூடிய நன்கு அனுபவமுள்ள சமையற்காரர்கள் மற்றும் உதவி சமையற்காரர்கள் தேவை. தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**077 788 7830**
**10ஆம் வட்டாரம், புங்குடுதீவு.**

## காணி விற்பனைக்கு

ரவிகராஜ் அருகாமை சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித்தீர்மானிக்கப்படும். (CS 1233)(3/6)

**T.P : 077 656 3582**

## வவுனியாவில் காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒருபரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக் காணிகள் விற்பனைக்குள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 656 3582**

## தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பதற்கான நிலங்களைப் பகிரங்க ஏலத்தில் வழங்குதல்

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் 2023 ஆம் ஆண்டு மகோற்சவ காலப்பகுதியில் (22.03.2023 தொடக்கம் 15.04.2023 வரை) தற்காலிக வியாபாரம் மேற்கொள்வதற்கான நிலங்கள் பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன.**

**காலம் :- 12.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**காலை :- 9.00 மணி**
**இடம் :- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றல்**

ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் ரூபா 500.00 இனை கேள்வி வைப்புப்பணமாகச் செலுத்தி 11.03.2023 ஆந் திகதிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். ஏலத்தில் தேர்வு செய்யப்படுவோர் 20.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் முழுத்தொகையையும் செலுத்தி தமது தேர்வினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

பெறுநர் குழு
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

குறிப்பு:- பெறுநர் குழுவின் முன்னனுமதி பெறப்படாத நிறுவனங்கள் எவையும் இவ் ஆலய சுற்றாடலில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. (CR/39365)4.6

## வீடு விற்பனைக்கு

IBC Road. வெள்ளவத்தையில் 1150 sqft 3 Bedrooms Apartment 2 ஆம் மாடியில் உடன் விற்பனைக்கு. வெளிநாடு செல்ல இருப்பதால் விலை குறைத்துத் தரப்படும். தரகர் வேண்டாம்.

**077 522 2613**

## வீடு விற்பனைக்கு

பம்பலப்பிட்டி Galle Road அருகில் 2 Bedrooms வீடு. 3 ஆம் மாடியில் உடனடி விற்பனைக்கு. தரகர் வேண்டாம்.

**077 770 0582**

## வீடுவாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

**077 233 6267**

## வாடகைக்கு

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் 3 அறை வீடு வாடகைக்குண்டு.

**070 134 8384**

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பகுதிநேர பணியாளர் தேவை. (மாலை 5.00 மணிக்குபின்)

**077 419 5015**

## கட்டடம் / காணி தேவை

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் A9 வீதி முகப்புடன் ஒரு ஏக்கர் இடம் அல்லது 2500 சதுர அடி கொண்ட கட்டிடம் விலைக்கு வாங்குவதற்கு அல்லது குத்தகைக்குத் தேவை.

தொடர்பு: அன்ரன் - 077 388 7989
ஜனத் - 077 211 5438

## மணமகள் தேவை

28 வயதுடைய, யாழில் பிறந்து, லண்டனில் Assistant Accountant ஆகப் பணிபுரியும் 5'3" உயரமுடைய இந்து. எமது அழகான மணமகனுக்கு இலங்கையில் / லண்டனில் பிறந்து தற்போது லண்டனில் PR உடைய படித்த அழகான மணமகள் தேவை.

**076 632 4005**
**propuk1994@gmail.com**

## மண் தேவை

இடைக்காட்டிற்கு 500 டிப்பர் செம்பாட்டு மண் தேவை. மண்ணைப் பார்த்து விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 345 0039, Whatsapp:077 333 3233**

## விற்பனைக்கு

றாக்கைகள், கண்ணாடி சோக்கேசுகள் விற்பனைக்கு.

**076 682 9867,077 525 8922**

## காணி தேவை

3 ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரையான தோட்டக்காணி வடமராட்சி, தென்மராட்சி பிரதேசத்தில் உடனடியாக தேவை. யாழ்ப்பாணம் தொடக்கம் முகமாலை வரை A9 வீதியோரமாக 1 ஏக்கர் தேவை.
தரகர் தேவையில்லை.

**077 345 0039, Whatsapp:077 333 3233**

## வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் 45x12, 45x18 அடிகள் கொண்ட களஞ்சியசாலைகள் வாடகைக்கு உண்டு. படிக்கும் மாணவர்களுக்கான வீடுகள், அறைகள், சுற்றுலா பயணிகளுக்கான வீடுகள், அறைகள் நவீன மயத்துடன் Parking வசதியுடன் நாளாந்தம், வாராந்தம் வாடகைக்கு விடப்படும்.


**077 345 0039, 077 348 0039**

## வீடு வாடகைக்கு உண்டு

தாவடியில் 4 அறைகளுடன் கூடிய மிக அழகான வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்கள், நிறுவனங்கள் விரும்பத்தக்கது. நாவலர் வீதி யாழ்ப்பாணத்தில் 10 அறைகளுடன் கூடிய 3 மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**077 345 0039, 077 348 0039**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## மன்.மாவட்டச் செயலகத்தில் நடமாடும் மருத்துவமுகாம்

மன்னார், மார்ச் 5

உலக உடற்பருமன் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடமாடும் மருத்துவமுகாம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெலின் வேண்டுகோளுக்கு இணங்க மன்னார் மாவட்ட தொற்றா நோய் மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி ஒஸ்மன்ட் டெனி தலைமையில் மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனை மருத்துவ அதிகாரிகள் மற்றும் தாதியர்கள் இணைந்து இந்த மருத்துவ முகாமை முன்னெடுத்தனர்.

மருத்துவமுகாமில் முதற்கட்டமாக மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் உள்ளிட்ட 80 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இவர்களுக்கு உடற்பருமன், குருதிஅழுத்தம், நீரிழிவு, பற்சிகிச்சை, சிறுநீரகம், கண் தொடர்பான நோய் நிலைகள் பரிசோதிக்கப்பட்டதுடன் அதற்கான மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ம-14,60)



## போதைப்பொருள் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 5

மாதகல் நுணசை மகா வித்தியாலயம், மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்குப் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பும் சட்ட ஏற்பாடுகளும் போன்றவை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

கருத்தரங்கில் வளவாளர்களாக போதைப்பொருள் பாவனைத்தடுப்பு உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேசசெயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14,66)

### தாதியிடம் சில்மிஷம்

## பொலிஸ் அதிகாரி இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 5

களுத்துறை அளுத்கம பகுதியில் பணி முடித்து வீடு திரும்பிய தாதி ஒருவரிடம் பாலியல் சேட்டை புரிந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் பணிஇடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

தொடங்கொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய 54 வயதான அதிகாரியே இவ்வாறு பணிஇடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரைப் பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## சீனா நன்கொடை எரிபொருள் விவசாயிகளுக்கு விநியோகம்

கொழும்பு, மார்ச் 5

சீன அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட எரிபொருள் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கைக்கமைய இலங்கைக்கு 6.98 மில்லியன் லீற்றர் டீசலை சீனா நன்கொடையாக வழங்கியது. பல்வேறு சிக்கல் காரணமாக எரிபொருளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இது குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் அண்மையில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் சீனாவால் வழங்கப்பட்ட எரிபொருளை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதையடுத்தே துரிதமாக எரிபொருளை விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)






## தாட்சாயணிக்கு வாழ்த்து அரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 5

இலங்கை சாகித்திய மண்டலம், வடக்கு மாகாணசபை, தமிழகப் பண்பாட்டு அமைப்புகள் போன்றவற்றில் கவிதை, சிறுகதை, நாவல், பனுவல்களைப் படைத்து கலை இலக்கிய உலகால் பாராட்டப்பட்டுவரும் வலி.மேற்கு பிரதேசசெயலாளர் திருமதி பிரேமினி (தாட்சாயணி) பொன்னம்பலத்துக்கு வாழ்த்தரங்கு நிகழ்வு நடத்தப்படவுள்ளது. சங்கானை கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தின் ஏற்பாட்டில், கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக அரங்கில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறீகணேசன், கே.ஏ.எஸ். நூலக நிர்வாக கலாநிதி ந.இரவீந்திரன், வலி.மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் ஜெயந்தன் உள்ளிட்டோர் ஆற்றவுள்ளனர். (ச)

## வனவிலங்குகளைப் பார்வையிட சிறந்த இடமாக இலங்கை

### போர்ப்ஸ் சஞ்சிகை தரப்படுத்தல்

உலக நாடுகளில் வனவிலங்குகளைப் பார்வையிடச் சிறந்த இடமாக இலங்கை உள்ளது என்று போர்ப்ஸ் சஞ்சிகை தரப்படுத்தியுள்ளது.

உலக நாடுகளில் சிறுத்தைகளின் அடர்த்தியான பரம்பலைக் கொண்ட இடமாகவும் ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளை விடவும் மிகச்சிறந்த பூனை இனங்களைக் கொண்ட இடமாகவும் இலங்கை அமைந்துள்ளது என அந்தச் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. ஆசிய யானைகள், மயில்கள், நீர்எருமைகள், குரங்குகள் மற்றும் தேன் உண்ணி, கரடிகளை அதிகம் கொண்ட தேசமாகவும் இலங்கை அமைந்துள்ளதாக அதில் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இந்த ஆண்டின் ஆரம்பம் முதலே இலங்கை தனது தனித்துவமான சுற்றுலா சலுகைகள் மற்றும் இயற்கை அழகு காரணமாக உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்களுக்கு கரிசனையே இல்லை!

## பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 5

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிராக தற்போது போர்க்கொடி உயர்த்தும் தொழிற்சங்கத்தினர் நடுத்தர மக்களின் பொருளாதார நிலைமை குறித்து அவதானம் செலுத்தவில்லை. நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் அனைவரும் விட்டுக்கொடுப்புடன் செயற்படவேண்டும் - இவ்வாறு போக்குவரத்து துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் நாடு என்றுமில்லாத வகையில் பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. தற்போது அரசியல் காரணிகளுக்கு அப்பாற்பட்ட வகையில் பொருளாதாரக் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம்.

சவால்களுக்கு முகம் கொடுத்து பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்காக, கடந்த ஆறுமாத காலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எடுத்த தீர்மானங்களால் மக்களின் இயல்பு வாழ்க்கை இயல்புக்குத் திரும்பியுள்ளது.

நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மாத்திரம்தான் பொறுப்புக்கூற வேண்டும் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நடுத்தர மக்களின் பொருளாதார நிலைமை குறித்து அவதானம் செலுத்தாது அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிராக தொழிற்சங்கத்தினர் போர்க்கொடி உயர்த்துகின்றனர். நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார். (ச-இ)

# வடக்கில் மழைக்கு வாய்ப்பு



கொழும்பு, மார்ச் 5

வடக்கு மாகாணத்தில் சில இடங்களில் இன்று மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

நாடு முழுவதும் இன்று மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு, ஊவா, வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது - என்றுள்ளது. (ம)


### தேவை

காலியில் உள்ள கோயில் ஒன்றிற்கு கணனி அறிவுடைய உதவியாளரும் மற்றும் பல வேலையாட்களும் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 071 133 1133

### தங்குமிட வசதி உண்டு

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் பெண் பிள்ளைகளுக்கான தங்குமிட வசதி உண்டு.

பானு என்டபிறைஸ்
கிளிநொச்சி
077 753 1440, 077 279 1634

### ஆட்கள் தேவை

முதியவர்கள், குழந்தைகள் மற்றும் நோயாளர்களை பராமரிப்பதற்கு ஆட்கள் தேவை.

பானு என்டபிறைஸ்
கிளிநொச்சி
077 753 1440, 077 279 1634

### வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் யூஸ் கடைக்கு ஆள் தேவை. சோட்டிஸ் போடத் தெரிந்தவர் விரும்பத்தக்கது / வித்தியாசமான சோட்டிஸ் போடுபவர்கள் தேவை.

077 138 9631

### தேவை

பேலியகொடையில் உள்ள கோயில் ஒன்றிற்கு கணனி அறிவு உடைய உதவியாள் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 077 349 3062

### காணி விற்பனைக்கு

யாழ். நகரை அண்டிய பகுதியில் மிகவும் நல்ல சூழலில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு:
076 170 4822
076 123 8091

### பதவி வெற்றிடங்கள்

இல: 555, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ மாருதி பதிப்பகத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலை முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை.

1. கணனி வடிவமைப்பாளர்
2. புத்தகம் கட்டுனர்
3. வரவேற்பாளர் (பெண்)

தொடர்புக்கு :- 077 791 7680

### வேலையாட்கள் தேவை

வின்ஸ் கோம் கெயர் நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, கொழும்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வீடு மற்றும் வைத்தியசாலைகளில் வயோதிபர் நோயாளிகளை பராமரிப்பதற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும்.

076 099 3034, 076 099 3035


## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 08 . 1928 — இறப்பு 04 . 03 . 2023



### திருமதி கணபதிப்பிள்ளை மகேஸ்வரி

வடமராட்சி கொற்றாவத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கணபதிப்பிள்ளை மகேஸ்வரி அவர்கள் 04.03.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துதம்பி தெய்வானை தம்பதிகளின் அன்புப்புதல்வியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் பாலகிருஷ்ணன், பாலச்சந்திரன் (UK), கிருபாலமூர்த்தி, லிங்கேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கதிர்காமராஜா, சிவராணி, அரியமலர் (UK), சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாகரன் (UK), அபிராமி (France), ஆனந்தசுரேஷ் (UK), துஷாந்த் (UK), ஆதவன் (UK), திலீபன் (UK), வசந்தன் (UK), செந்தூரன்(UK) காலஞ்சென்ற திவியா, கோபியா, பிரதீப், நிதர்ஷினி, சுவஸ்திகா, ரகுராம் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ரோபன், ரொபி, சார்லிபாலா, சுருத்திகா, கிருத்திகன், கேஷ்மா, சேயோன், ஷ்ரோன், நிவியா, மார்கஸ், கோபி ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக இன்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு ஊரணி பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்பு: +94772856100(மகன்)

(CR 39393) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 09 . 1934 — இறப்பு 02 . 03 . 2023



### இம்மனுவேல் சவேரியம்மா

(முன்னாள் ஆசிரியர்)

நாவாந்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இம்மனுவேல் சவேரியம்மா (முன்னாள் ஆசிரியர்) கடந்த (02.03.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் இம்மனுவேல் (துரைசிங்கபாலா, முன்னாள் யாழ். மாநகர சபை எழுதுவினைஞர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சீமான்பிள்ளை இராசாத்தி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான யோசேப் அக்கினேஸ் தம்பதியரின் மருமகளும், ஏணஸ்ற் (பாபு-கனடா), எட்மன் (செல்வன்-கனடா), காலஞ்சென்ற எல்மோ (மோகன் - கனடா), எரிக் (றூபன் - கனடா), எமில் (நேசன்-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜோதினி (கனடா), செறி (கனடா), பெற்றி (கனடா), யாழினி (கனடா), இவோன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், எல்றிச்(கனடா), எல்ற்றன்(கனடா), ஜோடன்(கனடா), எட்றிக்(கனடா), கெவிஷா (கனடா), எபிஷன்(கனடா), எமிக்ஷா(கனடா), இறோசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மரியமலரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், குணம், பிலோமினம்மா, ஜெறாட் (குனம்), ஜெயபாலன் மற்றும் யசிந்தா, அருட் சகோதரி நிக்கொலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் நாளை (06.03.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச்சென்று இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1216) 1x6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். நகரிலுள்ள 'பிள்ளையார் இன்' தனியார் விடுதியிலேயே இன்று மு.ப. 11.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தவிர்த்து ஏனைய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இன்றைய கூட்டத்துக்கு அழைப்புவிடுத்துள்ளோம். எமது ஆலோசனைக்குழுவில் அங்கம் வகிக்கும் பல்கலைக்கழக பேராசிரியர் சூசைதாசன், சமூகச் செயற்பாட்டாளர் செல்வினும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடமாகாண மீனவர்களின் அண்மைக் கால பிரச்சினைகள், கடலட்டை பண்ணைசார் பிரச்சினைகள், இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல்கள், இந்திய மீனவர்களுக்கான அனுமதி என பல தரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப் படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கும் எமது பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொள்ளவும் கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அல்லது மறுநாள் புதன்கிழமை சந்திப்பு இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஜனாதிபதியுடனான சந்திப்பில் பேச வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் இன்று ஆராயவுள்ளோம் - என்றார். (அ-ஓ,5,125)

## இலங்கைக்...

தெரிவித்தார்.

கச்சதீவு பெருநாளுக்காக தமிழகத்திலிருந்து வருகை தந்த உறவுகள், தமது அனுபவங்களை 'உதயன்' செய்தியாளருடன் பகிர்ந்து கொண்டனர். இதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

'சிறு வயதில் எமது பாம்பன் பாலம் கட்டும்போது இந்தியக் கடற்படையின் ஆயுதத்தைக் கண்டோம். அதன்பின்னர் எமக்கு ஆயுதங்களைக் காண்பதற்கான வாய்ப்பு இல்லை. மக்களை அச்சுறுத்தும் வகையில் அவர்களுக்குத் தெரியத்தக்கதாக இப்படி ஆயுதங்களை வைத்திருக்கமாட்டார்கள். இப்போது இலங்கை கடற்படையின் ஆயுதங்களைப் பார்க்கும்போது பயமாக இருந்தது. ஆனால், இங்குள்ள (இலங்கை) மக்களுக்கு இது சகஜமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்' - என்றார்.

இதேவேளை - இராமேஸ்வரம் விசைப் படகுகள் சங்கத் தலைவர் எஸ்.எமறிட் தெரிவித்ததாவது:- எனதுதலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்காக தமிழக மக்கள் சார்பில் அந்தோனியாரிடம் பிரார்த்தித்தேன். இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைகள் தீரவேண்டும். இலங்கையிலுள்ள எமது உறவுகள் பொருளாதார ரீதியாகப்பலம் பெற வேண்டும் என்றும் கச்சதீவு அந்தோனியாரை வேண்டிக்கொண்டேன்.

2004 ஆம் ஆண்டு முதல் இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடிக்க எம்மை அனுமதிக்கின்றார்கள் இல்லை. இதை இரு நாட்டு அரசுகளும் அரசியல் பிரச்சினையாக மாற்றியுள்ளன. நாமெல்லாம் சமாதானமாக ஒன்றித்து வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சிறுவர்கள், பெண்கள் கடலில் நீண்ட நேரம் பயணம் செய்வது குறைவு. அவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து நீண்ட தூரக் கடற்பயணத்தை மேற்கொண்டு வருகின்றபோது, இலங்கை - இந்திய கடற்படையினர் ஒருங்கிணைந்து சோதனைகளை மேற்கொள்ளலாம். இரு தரப்பினரும் தனித்தனியாகக் கடுமையான சோதனைகளை மேற்கொள்வதால் சிறுவர்களும் பெண்களும் மேலும் களைப்படைந்து விடுகின்றனர் - என்றார். (அ-ஓ,125)

## கச்சதீவுத் திருவிழாவில்...

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்திலிருந்து வருகை தந்த பக்தர்கள்தமக்குவழங்கிய உணவுதிருப்தியாக அமையவில்லை. ஏதோ உணவை வழங்கவேண்டும் என்பதற்காக வழங்கியமைபோன்று அமைந்ததாகக் குறிப்பிட்டனர். மலசலகூடமும் ஒழுங்காக இல்லை என்றும் இவ்வளவு பக்தர்கள் வருவார்கள் என்றால் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கவேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 11 மணிக்குப் பின்னர் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

மேலும், இதேவிடயத்தை இலங்கைப் பக்தர்களும் சுட்டிக்காட்டினர். விசேட விருந்தினர்களுக்கு ஒருவாறாகவும் பக்தர்களுக்கு இன்னொருவகையாகவும் பாகுபாடான கவனிப்பே கச்சதீவில் வழங்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

**ஊடகவியலாளர்களுக்கும் இடையூறு**

யாழ். மாவட்டச் செயலகம் ஊடகவியலாளர்கள் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்து கடற்படையினரின் விசேட கப்பலில் அழைத்துச் சென்றிருந்தது. கச்சதீவில் ஊடகங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட கூடாரத்தில் கடற்படையின் ஊடகப் பிரிவினரே இருந்தனர். ஊடகவியலாளர்களுக்கு வேறு ஒழுங்குகளும் அதிகாரிகளால் செய்து கொடுக்கப்படவில்லை.

கச்சதீவு திருவிழா முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர்களை மீள அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் எவையும் யாழ். மாவட்டச் செயலகத்தாலோ கடற்படையினராலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதேநேரம் தென்னிலங்கை சிங்கள ஊடகவியலாளர்களை கடற்படையினர் தமது விசேட படகில் ஏற்றிச் சென்றனர். தமது உறவினர்களையும் அவ்வாறு அழைத்துச் சென்றனர். வடக்கு மாகாண கடற்படைத்தளபதியிடம் இதுதொடர்பில் வினவியபோது; 'என்னிடம் எதுவும் தெரிவிக்கவேண்டாம். நீங்கள் எப்படியாவது செல்லுங்கள் ' என்று பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்தார்.

3 மணி நேரம் வரையில் காத்திருந்த ஊடகவியலாளர்கள் இறுதியாக வடதாரகை படகின் மூலம் குறிகாட்டுவான் திரும்பினர்.

இதேவேளை - திரும்பிச் செல்வதற்கான படகு ஒழுங்குகள் தொடர்பில் தகவல் தெரியாத மக்கள் அந்தரித்தனர். அவர்கள் அங்கிருந்து நெடுந்தீவு சென்று பின்னர் குறிகாட்டுவானுக்குச் சென்றனர். (அ-ஓ,125)

## கச்சதீவுத் திருவிழா...

நிறைவடைந்தது.

திருவிழா நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு கொடியேற்றத்தோடு ஆரம்பமானது. அன்றிரவு விசேட ஆராதனையைத் தொடர்ந்து சுற்றுப்பிரகாரமும் இடம்பெற்றது. திருவிழாவின் இரண்டாவது நாளான நேற்று, காலை 6 மணிக்கு திருச்செபமாலை நடைபெற்று, 6.30 மணிக்கு யாழ். ஆயர் மற்றும் அருட்தந்தையர்கள் வரவேற்கப்பட்டு 7 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலி கொழும்பு மறை மாவட்டத்தின் துணை ஆயர் அருட்தந்தை அன்ரன் தில்லைநாயகம் மற்றும் யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் 2 ஆயிரத்து 800 இலங்கை பக்தர்களும், 2 ஆயிரத்து 100 இந்திய பக்தர்களுமாக பக்தர்கள் 4 ஆயிரத்து 900 பேரும் வர்த்தகம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக 200 பேர் என மொத்தமாக 5 ஆயிரத்து 100 பேர் வருகை தந்தனர் என்று அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவித்தன.

கொரோனா காரணமாக கடந்த காலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பக்தர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,125)

## மத்திய வங்கி...

ஏற்ப வட்டி விகிதங்களை உயர்த்தியது பொருத்தமான விடயம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கொள்கை வட்டி வீதத்தை உயர்த்துவதற்கான மத்திய வங்கியின் முடிவு பொருத்தமானது மற்றும் பணவீக்க இலக்கு கட்டமைப்பின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களுக்கு இணங்கியுள்ளதாக இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் மற்றும் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் மசாஹிரோ நோசாகி ஆகியோர் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளனர்.

பணவீக்க இலக்குகளை அடைவதில் இலங்கை மத்திய வங்கியின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. (அ-ஓ,இ)

## இது தேர்தல் காலம்...

மீளக்கட்டியெழுப்பும் நேரமே இது - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது தேர்தலை நடத்தக்கூடிய நிலைமை இல்லை என்று தெரிந்தும் கூட சிலர் தேர்தல் வேண்டும் என்று அடம்பிடிக்கின்றனர். இப்போது தேர்தல் நடக்காது என்ற துணிவில்தான் அவர்கள் இவ்வாறு பிடிவாதமாகச் செயற்படுகின்றனர். முதலில் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவோம். அதன்பின்னர் தேர்தலை நடத்துவோம் - என்றார். (அ-ஓ,22)

## 9 நாள்...

வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு மார்ட்டின் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அந்தக் கட்சியின் சார்பில் மேயராக இருந்த இ.ஆர்னோல்ட்டின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவி விலகியுள்ளார். புதிய தெரிவு 10ஆம் திகதி நடைபெறும் என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் சார்பில் சொலமன் சிறிலை மேயர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று மாநகரசபை உறுப்பினர்களும் கட்சி உயர் மட்டத்தில் ஒரு சிலரும் விரும்புகின்றனர். ஆனால், கட்சி உயர் மட்டத்திலுள்ள ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரைக் கடுமையாக எதிர்க்கின்றனர். இந்தநிலையில் இன்றைய தினம் யாரை முதல்வர் பதவிக்கு நிறுத்துவது என்று இறுதி முடிவெடுக்கப்படலாம் என்று தெரியவருகின்றது. (அ-ஓ,5)

## உயர்...

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முடக்குவதைத் தவிர்க்குமாறு நிதி அமைச்சின் செயலர், நிதி அமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

'நிதி அமைச்சு அல்ல, எந்தத் தரப்பாக இருந்தாலும் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றாகவேண்டும். எனவே, நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் செயற்படவேண்டியது எமது பொறுப்பாகும். அதற்கேற்ற வகையில் எமது செயற்பாடுகளும் அமையும்' எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ஓ,44)

## எந்தத்...

அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து பிற்போடமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடமும் அடுத்த வருடமும் தேர்தல்களுக்கான வருடங்கள். ஆனால், எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று எம்மால் ஊகிக்க முடியவில்லை. தேர்தல் தொடர்பில் எல்லோரிடமும் சந்தேகங்கள் எழுகின்றன. எந்தத் தேர்தல் நடந்தாலும் அதை எதிர்கொள்ளும் திராணி சிறிலங்கா பொதுஜன பெரமுன விடம் உண்டு.

எந்தத் தேர்தல் நடந்தாலும் மொட்டுக் கட்சி வெல்வது உறுதி. உள்ளூராட்சி சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்று மூன்று தேர்தல்களையும் மொட்டுக் கட்சி சந்தித்தது. எந்தத் தேர்தலிலும் தோற்ற வரலாறு மொட்டுக் கட்சிக்கு இல்லை.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதுபோல் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மாத்திரம்தான் அரசை மாற்ற முடியும். அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் தொடர்ந்து பிற்போடமுடியாது. மக்களின் ஜனநாயக உரிமை நிலைநாட்டப்படவேண்டும் - என்றார். (அ-ஓ,22)

## 1.5 பில்...

நாணய நிதிய ஒப்பந்தம் உறுதியானதன் பின் உலக வங்கியால் முதலாம் தவணை நிதி வழங்கப்படும் என்று ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-ஓ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிச் சிறார்களின் மாதிரிச்சந்தை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 5

வயாவிளான் மீள் எழுச்சிக்கான உதவும் கரங்கள் அமைப்பின் அனுசரணையில் வயாவிளான் மேற்கில் இயங்கி வரும் சிவசக்தி முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் மாதிரிச்சந்தை நிகழ்வு, முன்பள்ளி விளையாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் முற்பகல் 10.30 மணி வரை இடம்பெற்றது.

சிவசக்தி முன்பள்ளிச் சிறார்களின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கில் அண்மையில் முன்பள்ளிச் சிறார்கள் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இதன் ஒரு கட்டமாக மரு தனார்மடம் பொதுச்சந்தைக்கும் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு இடம்பெறும் செயற்பாடுகளையும் சிறார்கள் பார்வையிட்டிருந்தனர்.

சிறார்கள் பார்வையிட்ட விடயங்களைத் திறனாக வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுவர் மாதிரிச்சந்தையில், முன்பள்ளிச் சிறார்கள் வியாபாரிகள் போன்று உடைகள் அணிந்து ஆர்வத்துடன் கலந்துகொண்டு சந்தை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சிறார்களிடமிருந்து மரக்கறிகளைப் பொதுமக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர். நிகழ்வின் இறுதியில் சிறப்பான திறன்களை வெளிக்காட்டிய சிறார்களுக்கு சிறப்புப் பரிசில்களும், ஏனைய அனைத்துச் சிறார்களுக்கும் ஊக்குவிப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

(ம-14,66)

## குருதிக்கொடை

சாவகச்சேரி, மார்ச் 5,தவக்காலத்தை முன்னிட்டு சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில், குருதிக் கொடைமுகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை புனித லிகோரியார் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (ம-14,66)

## கவிதை நூல் அறிமுக நிகழ்வு

கவிஞர் ச.முகுந்தனின் 'சுட்டமண்' கவிதை நூல் அறிமுக நிகழ்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் நூல் அறிமுக உரையை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஆசிரியர் கவிஞர் இ.சு.முரளிதரன், கருத்துரைகளை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ம-14)


### வாகனம் விற்பனை

HONDA VEZEL
HYBRID ORANGE
கார் விற்பனைக்குண்டு.
076 080 2577

### விற்பனைக்கு

ஹொண்டா. சுப்பர் கப் 50. ( Honda )
500 7XXX (லான்சர் மொடல்) பாவிக்கும் நிலையில் மற்றும் சாப்பாட்டு மேசை, கதிரை தேக்கு விற்பனைக்குண்டு.
077 247 4740, 077 247 4714

### மணமகள் தேவை

1980, மூல நட்சத்திரம், உதயத்துச் செவ்வாயில் பிறந்த தனியார் துறையில் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
கிறிஸ்தவம். இந்து ஏற்றுக்கொள்ளப்படும்.
076 603 6044, 075 242 5847

### ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR
ஆர்வமுள்ள சகலருக்கும்
From Grade 7 to Graduates
தொழில்புரிபவர்களுக்குமானது.
K.Ganesh B.A 077 766 8725

### தேவை

நியூசன் சென்ரருக்கு பெண் Clerk வேலையாள் தேவை. 25 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்டோர். யாழ்ப்பாணத்தை அண்மித்தோர். சம்பளம்- 17.000
வேலை நேரம்: 8.00-5.30 வரை. 077 293 5265

### வீட்டுப்பணிப்பெண் தேவை

கொழும்பில் இருவர் கொண்ட வீடொன்றிற்கு வீட்டுப்பணிப்பெண் ஒருவர் தேவை. (50 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது).
தொடர்புகளுக்கு :077 77 01 523

### காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

இல.246, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியில்
4 பரப்புக் காணியுடன் மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு.
கீழ் தளத்தில் 3 அறைகள், இணைந்த குளியலறை, வரவேற்பறை, சமையலறை, வாகனத்தரிப்பிடம்,
மேல் தளத்தில் 2 அறைகள், வரவேற்பறை என்பவற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 492 7359
whatsapp: +447 495 619 963

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு.
- பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும். வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 46 50 171, 076 911 9371

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு.
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச. தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 4350 614, 077 6385 683

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A-32 மன்னார் செல்லும் பிரதான காப்பெற்வீதி முகப்பாக.
- நாவற்குழி சந்தியிலிருந்து 100m தூரம்.
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த நிலம்.
- நன்னீர் ஊற்று நிலம்.

தொடர்பு
077 288 0152
076 436 5814

### யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

### பணிநிலை வெற்றிடம்

மன்னாரில் இயங்கும் வியாபார நிறுவனத்திற்கு தகுதியானவர்களிடம் இருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

▶ விநியோக மையத்திற்கான முகாமையாளர்கள் - 02
(Managers for Distribution Channels & Vechile Service Station)



- தகைமைகள் : முன்னனுபவம் மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும் ஒய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

▶ முகாமைத்துவ அலுவலர்கள் - 02
(Management Staffs)



- தகைமைகள் : க/பொ/த உயர்தர சித்தி. கணினி தொடர்பான அனுபவம் (மன்னாரை நிரந்தரவசிப்பிடமாக கொண்டோருக்கு முன்னுரிமை.

▶ விற்பனை பிரதிநிதி - 02 (கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்)
(Marketting Staff)



- தகைமைகள் : ஏற்கனவே இத்துறையில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயிலுனர்களும் விண்ணப்பிக்கலாம்.

▶ விண்ணப்ப முடிவுதிகதி : 17.03.2023
▶ சுயவிபர தகவல்களை Whatsapp செய்யவும்
▶ உணவு, தங்குமிடம் இலவசம்
▶ சம்பளம் தகைமைக்கு ஏற்ப பேசித்தீர்மானிக்கப்படும்.

Alphaleaden GM (Pvt) Ltd
Eluthoor, Mannar.
023 222 3199, 077 993 3900 whatsapp

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 209 8826

### BUS விற்பனைக்கு

54 ஆசனங்களைக்கொண்ட பேருந்து (BUS) வழி அனுமதிப்பத்திரத்துடன் விற்பனைக்குண்டு.
077 612 0953

### காணி விற்பனைக்கு

யாழ். K.K.S. துறைமுகம், பலாலி விமானநிலையம் என்பவற்றுக்கு 1km, 1.5km தூரத்தில் 9, 12 பரப்புக் காணிகள் விற்பனைக்குண்டு.
075 521 3533

### வீடு வாடகைக்குண்டு

பொற்பதி வீதி, கொக்குவிலில் (மருத்துவபீடத்திற்கு அருகாமையில்) புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.
076 210 2972


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வெளிநாட்டு மாப்பிளை வேண்டி
விரதம் இருந்தாரெங்கள் ஆண்டி
களிசான் போட்ட கடைசிப் பெட்டையோ
ஒளித்தோடினாள் ஒருத்தனை வேண்டி !

- காரைக்கவி


# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை (05.03.2023) சிகரம் : 139

# மூளை உழைப்பாளிகள் தப்பியோடும் நாட்டில் ஒரு சிப்பாய் கண்ட கனவு?

○ நிலாந்தன்



புத்த பகவான் ராஜபோகங்களையும் குடும்பத்தையும் துறந்து சந்நியாசி ஆகியவர். ஆனால் அவர் இலங்கைத் தீவில் நிலாவரையில் இராணுவ முகாமில் உள்ள ஒரு சிப்பாயின் கனவில் தோன்றி தனது சிலையை நிலாவரையில் வைக்குமாறு கூறியதாக அந்த சிப்பாய் கடந்தகிழமை கூறியுள்ளார். ரவூப் ஹக்கீம் முன்பொருமுறை கூறியது போல நாட்டில் புத்தர் சிலைகள் எல்லைக் கற்களாக மாற்றப்பட்டு விட்டன.

அந்தச் சிப்பாய் நிலாவரையில் யாருக்காக நிலத்தைப் பாதுகாக்கின்றாரோ, அந்த மக்கள் மத்தியில் உள்ள மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அவ்வாறு வெளியேறவேண்டாம் என்று நாட்டின் ஜனாதிபதி மன்றாடிக் கொண்டிருக்கிறார். யாருடைய நிலத்தை யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்தச் சிப்பாய் நிலாவரையில் குந்திக் கொண்டிருக்கிறார்?

இலங்கைத்தீவின் மொத்த படைத் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி தமிழ்ப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மிகச் சிறிய இலங்கைத்தீவு தனது அளவுப் பிரமாணத்திற்கு அதிகமாகப் படையினரைக் கொண்டிருக்கிறது. இந்தப்படையில் மூன்றில் இரண்டு பகுதி வடக்கு- கிழக்கை படை மயப்படுத்த நிறுத்தப்பட்டிருக்கிறது என்று ஒரு புள்ளிவிவரம் உண்டு. நாட்டின் பொதுத்துறை ஊதியத்தில் சுமார் 50% படைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 பேர்களுக்கு எத்தனை படைவீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல்- வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்டின் பணிப்பாளர்கூறுகிறார். இலங்கைத் தீவின் பாதுகாப்புச் செலவினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டிவரும் தொகையை விட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார்.

சிறிய இலங்கைத் தீவு பாகிஸ்தானைப் போலவே தனது பருமனை விடப் பெரிய படைக்கட்டுமானத்தைக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானிலும் இப்பொழுது பொருளாதார நெருக்கடி. சில நாள்களுக்கு முன் பாகிஸ்தானிய ஊடகங்களில் வந்த செய்திகளின்படி, படையினருக்கு ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதி குறைக்கப்பட்டதால், அங்கே படையினருக்கு மூன்று வேளையும் சாப்பாடு போடக் காசில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் இலங்கைத்தீவில் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பிக்குகளுக்கு மூன்று வேளையும் சாப்பாடு கிடைக்கிறது. நிலாவரையில் கனவுகண்ட சிப்பாய்க்கும் மூன்று வேளை சாப்பாடு கிடைக்கிறது .

நாட்டின் பெருமளவு செல்வத்தையும் தலைப்பேறானவற்றையும் அனுபவிக்கும் படைக்கட்டமைப்பின் ஆட்தொகையைக் குறைத்தாலே போதும், நாட்டின் செல்வத்தில் பெரும் பகுதியை மிச்சப்படுத்தலாம். அவ்வாறு படைத்தரப்பில் ஆட்குறைப்பைச் செய்யவேண்டும் என்பது ஐ.எம்.எஃப்.பின் நிபந்தனைகளில் ஒன்று என்று முன்பு கூறப்பட்டது. ஆனால், அண்மையில் கண்டியில் உரையாற்றிய பொழுது ஜனாதிபதி ஐ.எம்.எஃப். விதித்த 15 நிபந்தனைகளை நிறைவேற்றியது பற்றிப் பேசியிருக்கிறார். ஆனால் அதில் படை ஆட்குறைப்புத் தொடர்பாக எதுவும் பேசவில்லை. சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அரசியலில் படைகளின் எண்ணிக்கையைக் குறைக்க முற்படுவது அரசியல் தற்கொலைக்கு நிகரானது என்பது ரணிலுக்குத் தெரியும். அதனால் அவர் அதனை அடக்கி வாசிக்கின்றாரா, அல்லது 13ஆவது திருத்தத்தை எதிர்த்து வீதியில் இறங்கியதுபோல படைக்குறைப்பைச் செய்தால் அதற்கும் எதிராகவும் பிக்குகளும் எதிர்க்கட்சிகளும் வீதியில் இறங்கலாம் என்ற ஒரு சாட்டைக்கூறி அந்த விவகாரத்தை ஒத்திவைத்து வருகிறாரா?

ஆனால் படையினரை ஆட்குறைக்காமல் தமிழ்ப் பகுதிகளை இராணுவ மயநீக்கம் செய்யமுடியாது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்படும் ஐ.எம்.எஃப். போன்ற தரப்புகள் படை ஆட்குறைப்பை ஒரு நிபந்தனையாக முன் வைக்கவில்லையா? அதை ஒரு நிபந்தனையாக முன்வைக்கும்படி தமிழ்த்தரப்பு குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் மேற்கு நாடுகளை வற்புறுத்தவில்லையா? படையினரை ஆட்குறைக்காமல் பொருளாதாரத்தை நிமிர்த்தமுடியுமா? படை ஆட்களின் எண்ணிக்கையை குறைக்காமல் ஐ.எம்.எஃப்.பின் ஏனைய நிபந்தனைகளை நிறைவேற்றலாம் என்று அரசாங்கம் நம்புகின்றதா?

ஆனால் அரசாங்கம் ஐ.எம்.எஃப்.பின் ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக மானியங்களை வெட்டி, உரத்தின் விலை, மின்கட்டணம், வங்கி வட்டி விகிதம் போன்றவற்றை உயர்த்தியதனால் அடிமட்ட மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னொருபுறம் அரசாங்கம் புதிதாக விதித்திருக்கும் வரியினால் படித்த நடுத்தர வர்க்கம் அதாவது நாட்டில் அதிக வருமானத்தைப் பெறும் வகுப்பினர் பதற்றமடையத் தொடங்கியுள்ளார்கள்.

உரமானியத்தை வெட்டியதனால் உரத்தின் விலை கூடியது. அதனால் விவசாயிகள் நெல்லின் விலையைக் கூட்டினார்கள். நெல்லை வாங்கி விற்கும் வியாபாரிகள் தங்களுடைய லாபத்தையும் சேர்த்து மேலும் விலையைக் கூட்டினார்கள். அதாவது மானிய வெட்டு, வரி உயர்வு, வங்கி வட்டி அதிகரிப்பு போன்றவற்றின் சுமைகள் அனைத்தும் சாதாரண மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படுகின்றன. அதனால்தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே.வி.பி. ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் பெருமெண்ணிக்கையான சிங்கள மக்கள் பங்குபற்றினார்கள். அதுபோலவே கடந்த புதன்கிழமை 40க்கும் குறையாத தொழிற்சங்கங்கள் இணைந்து தமது எதிர்ப்பைக் காட்டின. இது ஒருபுறம். இன்னொருபுறம் அரசாங்கம் விதித்திருக்கும் புதிய வரியினால் நாட்டின் படித்த மேல், நடுத்தர வர்க்கம் நாட்டை விட்டுத் தப்பியோடத் தொடங்கியுள்ளது. கடந்த ஒரு வருடத்தில் மின்சாரசபையின் 72 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிந்தவர்கள் எனவும் மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன கூறியுள்ளார். நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தை இயக்குவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டும், ஆனால் இன்று 100 பேரே அங்கு பணிபுரிகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், இந்தப் பொறியியலாளர்கள் பற்றாக்குறையால், வருங்காலத்தில் ஆலையை நிறுத்த வேண்டிய நிலை கூட ஏற்படலாம் என்றும், அப்படி நடந்தால், மின் நெருக்கடி கடுமையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க பின்வருமாறு கூறியுள்ளார்...

"இந்த மாதத்தில் மாத்திரம் 50 முதல் 60 வரையிலான அரச மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். குறிப்பாக, சில மருத்துவர்கள் விடுமுறை பெறாமல் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இருப்பினும், நாட்டை விட்டு வெளியேறியுள்ள மருத்துவ நிபுணர்களின் பெயர் விவரங்களும் எண்ணிக்கையும் சுகாதார அமைச்சினால் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தகவலுக்கு அமைவாக மொத்தமாக 1,000 க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனப்புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, கிராமமட்ட மற்றும் நகர்ப்புற மருத்துவமனைகளில் மருத்துவர்களின் வெளியேற்றத்தால் மருத்துவமனை நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், கொழும்பு தேசிய மருத்துவமனை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை மற்றும் மஹரகம புற்றுநோய் மருத்துவமனை போன்றன இதுவரை மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்படவில்லை. மேலும், அங்கு விசேட மருத்துவ நிபுணர்கள் மருத்துவமனையில் காணப்பட்ட போதிலும், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதாரஊழியர்கள் மருத்துவமனைகளை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கு தொழில்நிமித்தம் சென்றுள்ளனர். அதேவேளை, அதிகளவிலான மருத்துவ ஆலோசகர்களும் மருத்துவமனைகளை விட்டு வெளியேறியுள்ளனர்"

இவ்வாறு ஒருபுறம், மூளைசாலிகளும் படித்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம், அண்மையில், அமெரிக்க யுத்தவிமானங்கள் படை அதிகாரிகளோடு நாட்டுக்குள் வந்து போயுள்ளன. திருகோணமலையில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து ஒரு கூட்டுத்தளத்தை உருவாக்கப் போவதாக "ஸ்ரீலங்கா கார்டியன்" எனப்படும் இணையஇதழ் கடந்த மாதம் 14 ஆம் திகதி ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. ஏற்கனவே இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகரும் உளவுத்துறையின் தலைவரும் இரகசியமாக இலங்கைக்கு வந்து போனதாகச் செய்திகள் கிடைத்தன.

பிச்சையெடுத்த போதிலும் இந்தச்சிறிய தீவு அதன் கேந்திர முக்கியத்துவம் காரணமாக இப்பொழுதும் அதன் கவர்ச்சியை இழக்கவில்லை. அதனால்தான் பேரரசுகள் இந்தச்சிறிய தீவைத் தேடிவருகின்றன. ஏற்கனவே சீனா அம்பாந்தோட்டையில் 99 ஆண்டுகளுக்கு நிரந்தரமாகக் குந்திவிட்டது. கொழும்புத் துறைமுகத்தில் ஒரு பட்டினத்தை கட்டியெழுப்பிவிட்டது. சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா, இலங்கையில் எங்கு தனது கால்களைப் பரப்பலாம் ? என்று தீவிரமாக உழைக்கின்றது. வடக்கில் கடலட்டை ஒரு ராஜதந்திரப் பொருளாக மாறிவிட்டது. இந்தச்சிறிய தீவு பேரரசுகள் பங்கிடும் அப்பமாக எப்பொழுதோ மாறிவிட்டது. ஒருபுறம் இந்தச்சிறிய தீவைப் பேரரசுகள் தேடி வருகின்றன. இன்னொருபுறம் இந்தச்சிறிய தீவின் படித்த மூளைசாலிகளோ நாட்டை விட்டுத் தப்பிச் செல்கிறார்கள். யாருடைய நிலத்தை, யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்தச் சிப்பாய் நிலாவரையில் முகாமிட்டிருந்து கனவு காண்கிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வல்லரசுகளின் பகடையான ஜி20

அ.நிக்ஸன்

ரஷ்ய - உக்ரைன் போரை இந்தியா இதுவரை பகிரங்கமாகக் கண்டிக்காத நிலையில், ஜி20 மாநாடு இந்த மாதம் இரண்டாம் திகதி வியாழக்கிழமை மாலை புதுடில்லியில் நடைபெற்றுள்ளது. தலைமைப் பொறுப்பை நரேந்திரமோடி ஏற்றதால் புதுடில்லியில் இடம்பெற்ற மாநாட்டில், உக்ரைன் மீதான போரை நிறுத்த இந்தியா, ரஷ்யாவுக்குப் புத்தி சொல்ல வேண்டும் என்ற இறுமாப்புடனேயே அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பங்குபற்றியிருந்தன.

வெள்ளிக்கிழமை வெளியான இந்த நாடுகளின் நாளிதழ்களில் போரை நிறுத்துவது பற்றி மாநாட்டில் பேசப்பட்ட விடயங்கள் கசிந்திருந்தன. ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல், உக்ரைன் போரை நிறுத்த வேண்டும் என்பதை ரஷ்யாவுக்குப் புரியவைக்க இந்தியா இந்த மாநாட்டைப் பயன்படுத்தும் என்று நம்பியிருந்தாகக் கூறினார் என்று பாகிஸ்தான் ரூடே ஆங்கில நாளிதழ் வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது.

ஜி20க்குத் தலைமை தாங்கும் இந்தியா, வொஷிங்டனின் கவனத்தை எப்போதும் ஈர்த்துள்ளது என்றும் குறிப்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏதேனும் பிரச்சனையின் அறிகுறி தென்படும்போது, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஊடகங்கள் அதனை ஊதிப் பெருப்பித்து இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் மேலும் பிளவுகளை உருவாக்க முற்படுவதாகவும் சீனாவின் குளோபல் ரைம்ஸ் செய்தி இணையம் குற்றம் சுமத்தியுள்ளது. ஆக, ஜி20 மாநாடு தொடர்பாக பாகிஸ்தான், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஊடகங்களின் கணிப்பின் பிரகாரம், உக்ரைன் மீதான போரை நிறுத்த இந்தியா, ரஷ்யாவுடன் பேசியிருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. அதேநேரம் சீன, ரஷ்ய ஊடகங்கள், உக்ரைன் மீதான போருக்கு அமெரிக்க மேற்குலகமும், ஐரோப்பிய நாடுகளும் முழு ஒத்துழைப்பு வழங்குவதாகப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளன. இந்த நிலையிலேதான் உக்ரைன் போரை நிறுத்துவது குறித்த ஏற்பாட்டுக்காக ஏப்ரல் மாதம் சீனாவுக்குப் பயணம் செய்யவுள்ளதாகப் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் அறிவித்துள்ளார். ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வரும் சமாதான முயற்சியை சீனா மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கியின் ஆலோசகர் தெரிவித்துள்ளார். பெல்ஜியம் ஜனாதிபதி சில நாள்களுக்கு முன்னர் சீனாவுக்குப் பயணம் செய்திருந்தபோது உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் சீனா ஈடுபட வேண்டும் என்ற தொனியில் கருத்தை வெளியிட்டிருந்தார். சீனாவும் அதற்கு உடன்பட்டிருந்தாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அதேநேரம் இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென ஜி20 மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஷெலன்ஸ்கி கேட்டிருந்தார். ஆனால் இந்திய அரசு அதற்கு பதில் வழங்காத நிலையில் தான் மாநாடு நடைபெற்றிருக்கிறது.

## இந்தியாவைக் காய்வெட்ட இலங்கையால் நகர்வுகள்

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் ஆரம்பித்து கடந்த மாதம் 24ஆம் திகதி ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ளது. ஆனால், போரில் யார் வெல்வார்கள், யார் தோற்பார்கள் என்பது இதுவரையும் தெளிவாகக் கூறமுடியாத நிலையில் இப்போரினால் சர்வதேச நாடுகள் பல முரண்பாடுகளையும் பொருளாதார நெருக்கடிகளையும் சந்தித்துள்ளன. இந்திய ரஷ்ய உறவு தொடர்ந்து நீடிப்பதால் அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்குப் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் முடிந்தவரை இந்தியாவைத் தம் பக்க ஈர்க்க பாகிஸ்தானுடன் உறவைப் பேணி அந்த நாட்டின் முப்படைகளையும் பலப்படுத்தும் திட்டங்களையும் அமெரிக்கா இன்றுவரை செயற்படுத்தி வருகின்றது. இவ்வாறு இந்தியா எதிர்கொள்ளும் புவிசார் அரசியல் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திச் சிறிய நாடான இலங்கையும், இந்தியாவைக் கடந்து அமெரிக்க - சினா அரசுகளுடன் நேரடி உறவைப் பேணும் இராஜதந்திர உத்திகளைக் கையாண்டு வருகின்றது.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விடயத்தில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை எப்படியாவது நடைமுறைப்படுத்திவிட வேண்டும் என்று இந்தியா இலங்கைக்குக் கடும் அழுத்தங்களைக் கொடுத்து வரும் நிலையில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக ரத்துச் செய்து இந்தியத் தலையீட்டை முற்றாக நீக்கம் செய்ய அமெரிக்க இந்திய பனிப்போரை இலங்கை நன்கு பயன்படுத்தி வருகின்றமை பட்டவர்த்தனம். குறிப்பாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்கம் செய்தால் இந்தியத் தலையீட்டைத் தவிர்க்கலாம் என்று பேராசிரியர் றொகான் குணரட்ன தொடர்சியாக ஆலோசனை வழங்கி வருகின்றார். இதனால், ரஷ்ய - உக்ரைன் போரினால் பல அழுத்தங்களுக்கு உள்ளாகி இராஜதந்திர ரீதியில் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்தியாவை, எப்படி வெட்டிக் காய்நகர்த்தலாம் என்ற திவிர பரிசீலனையில் கொழும்பு ஈடுபடுகின்றது. குறிப்பாக ஜெனீவா மனித உரிமைச் சபையின் தீர்மானம் மற்றும் பதின்மூன்று பற்றிய இந்தியாவின் அழுத்தங்கள் போன்றவற்றைத் தவிர்த்து, புவிசார் அரசியல் பொருளாதார சூழலுக்கு ஏற்ப அமெரிக்க இந்திய அரசுகளுடன் உறவைப் பேணும் உத்திகளில் புதுடில்லியில் இலங்கைத் தூதுவராகவுள்ள மிலிந்த மொறகொட ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

## சவாலுக்கு உட்பட்டுள்ள இந்திய வெளிவிவகாரம்!

உக்ரைன் போரின் பின்னரான தனது வெளிவிவகாரக் கொள்கை விவகாரத்தில் பெரும் சிக்கல்களை இந்தியா எதிர்கொண்டு வருகின்றது. பிரதானமாக உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடென்று கூறிக்கொள்ளும் இந்தியா, ஜனநாயக நாடான உக்ரைன் மீது தனது நட்பு நாடான ரஷ்யா நடத்தும் தாக்குதல்களைப் பாத்துக் கொண்டிருக்கின்றது. இதன் காரணத்தினாலேயே இந்திய வெளியுறவுக் கொள்கை பெரும் சவாலுக்கு உட்பட்டிருக்கின்றது. ஏனெனில் உக்ரைன் மீதான தாக்குதல்களை மேற்குலகின் ஜனநாயக நாடுகள் வெளிப்படையாகக் கண்டிக்கின்றன. உக்ரைனுக்கு ஆதரவாகவும் செயற்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்வதில் சொல்ல முடியாத அநீதிகளை ரஷ்யா செய்திருக்கிறது. அதேநேரம் ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளும் பல தடைகளை விதித்துள்ளன. ஆனால், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடென்று கருதப்படுகின்ற இந்தியா, உக்ரெயன் போர் விவகாரத்தில் இரட்டைக் கொள்கையைப் பின்பற்றி, ஜனநாயக விழுமியத்தை இரண்டாக்கியுள்ளது என்றே பொருள்கொள்ள முடியும்.

உக்ரைன் மீதான போர் தற்போதைய உலக பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்று கூறினாலும், ரஷ்யாவின் பொருளாதாரம் மிகப் பெரிய விழ்ச்சியைக் க்ண்டுள்ளது. இதன் காரணமாக ரஷ்யா மீதான பழைய பகைமைகளைத் தீர்க்க அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உக்ரைனுக்கு ஒத்துழைப்பதால், இப் போர் நீடிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருக்கிறார். அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைனுக்குச் சென்றுவந்த பின்னர் போர் மேலும் அதிகரிக்கும் தன்மை கொண்டதாக மாறிவிட்டது என்றும், போரை நிறுத்த மேற்குலக நாடுகளுக்கு விருப்பமில்லை எனவும் புடின் பகிரங்கமாகக் குற்றம் சுமத்துகிறார். ஜோ பைடனின் உக்ரைன் பயணம், ரஷ்ய - சீனா உறவுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே சீனாவின் குளோபள் ரைம்ஸ் வர்ணித்துள்ளது. உக்ரைன் போர் முடிவுக்கு வராமல், உக்ரைனுக்கு ஆதரவான அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஓரணியிலும் ரஷ்யா உள்ளிட்ட அதன் ஆதரவு நாடுகள் மற்றொரு அணியிலும் நின்று தாக்கத் தொடங்கினால், அது உலகப்போரை நோக்கிதான் செல்லும் என்ற எச்சரிக்கையை சீன ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுளளதாகக் குளோபல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

> அரசியல் அறத்துக்கு மாறாக இவ்வாறு விஞ்சிக் காணப்படும் வியூகங்களால் ஏற்பட்ட வலிகள், தோல்விகள் போன்ற உணர்வுகளைப் புரிந்துகொண்ட மனநிலை, ஜ20 மாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகளின் பேச்சில் இருந்து வெளிப்பட்டிருக்கிறது

அதேநேரம் கோதுமை, சோளம், கச்சா எண்ணெய், எரிவாயு மற்றும் உரங்களின் விலைகள் இருமடங்காக உயர்ந்திருக்கின்றன. ஆகவே போரால் உலக அளவில் நூற்று எழுபது கோடி மக்கள் பசி, பட்டினி போன்ற வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என ஐக்கிய நாடுகள் சபையும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் உலகில் உண்மையான ஜனநாயகம் இல்லை என்பதை குர்திஸ்தான் மக்களின் தேச விடுதலைக்கு மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் இழைக்கும் அநீதிகளும், பலஸ்தீன மக்களின் அரசியல் விடுதலையை நிராகரித்து, இஸ்ரேல் அரசின் பக்கம் நின்று சொல்லப்படும் நீதிக்கு மாறான நியாயப்படுத்தல்களும் பகிரங்கப்படுத்துகின்றன.

## இன்றும் அன்றும்

அதேநேரம் இலங்கை ஒற்றையாட்சிக்குள் தமிழ்த்தேசியக் கோட்பாட்டைக் கரைப்பதற்கு 2009இல் சிங்கள ஆட்சியாளர்கள் கையாண்ட சர்வதேச நியமங்களுக்கு மாறான போர் உத்திக்கு ஒத்துழைத்த மேற்குலகமும் ஐரோப்பாவும், இன்று உக்ரைன் மீது ரஷ்யா நடத்தும் போரை நிறுத்த இந்தியாவுக்கும் சீனாவுக்கும் கொடுக்கும் அழுத்தம் எந்த மனித நேயத்தை மையமாகக் கொண்டது என்ற கேள்விகள் எழாமல் இல்லை. அதேநேரம் இந்தியாவின் மௌனம் ஜனநாயகத்தில் எந்தப் பக்கமாக இருக்கிறது என்ற கேள்விகளும் இல்லாமலில்லை. மேற்குலகம் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மீதான சீனாவின் குற்றச்சாட்டு நேர்மையான அரசியல் நோக்கம் கொண்டதா என்ற வினாக்களும் நியாயமானது.

தமிழர்களின் அரசியல் போராட்டத்தை முற்றாக இல்லாமல் செய்யும் போரின்போது, இந்தியா சீனா மற்றும் மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் வெளியிட்ட ஒப்பாசாரக் கண்ட அறிக்கைகளுக்கும், உக்ரைன் மீது ரஷ்யா நடத்தும் போரைக் கண்டித்து வெளியிடும் கருத்துக்களும் இடையே வேறுபாடுகள் இருப்பதையும் ஆய்வாளர்களினால் அவதானிக்க முடிகின்றது.

அரசுக்கு அரசு அணுகுமுறை என்ற வாதம் ஒன்று உண்டு. ஆனால் மனிதாபிமானம், அதற்கான சர்வதேசச் சட்டங்கள், தேசிய இனங்களின் அரசியல் விடுதலை பற்றிய நியமங்கள் கோட்பாடுகள் என்பது அனைத்துச் சமூகத்துக்குமான சமநிலைத் தன்மை கொண்டது என்பதே அரசறிவியல் விளக்கம். ஆனால் ஒரு அரசு இழைக்கின்ற அநீதிகளை வேறுபல அரசுகள் கூட்டுச் சேர்ந்து நியாயப்படுத்தும் அரசியல் உத்திகளும், தமக்குத் தேவையற்ற புவிசார் விவகாரங்களை தவிர்த்து, அதனைப் பயங்கரவாதமாகச் சித்தரித்து விடுதலை கோரிப் போராடுகின்ற தேசிய இனங்களை ஓரங்கட்டும் வியூகங்களுமே உலகில் இன்று விஞ்சிக் காணப்படுகின்றன.

அரசியல் அறத்துக்கு மாறாக இவ்வாறு விஞ்சிக் காணப்படும் வியூகங்களால் ஏற்பட்ட வலிகள், தோல்விகள் போன்ற உணர்வுகளைப் புரிந்துகொண்ட மனநிலை, ஜ20 மாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகளின் பேச்சில் இருந்து வெளிப்பட்டிருக்கிறது. அவ்வாறு புரிந்து கொண்டாலும் ஒவ்வொரு அரசுகளும் தத்தமது புவிசார் அரசியல் பொருளாதார நோக்கில் இருந்து சிறுதுளியேனும் விட்டுக் கொடுத்தாத பிடிவாதம் மேலோங்கியிருந்ததை அவ்தானிக்க முடிந்தது. நெருக்கடிக்கான உரிய தீர்வுகள் இன்றியே மாநாடு முடிவடைந்துமுள்ளது. ஆனால் ஈழத்தமிழர்களையும் பலஸ்தீனியர்களையும் குர்திஸ்தானிகளையும் 'விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்', 'இணக்க அரசியல் அவசியமானது' என்று மாத்திரம் இந்த வல்லரசுகள் போதனை செய்வது தான் வேடிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரேசர் பெரியதம்பி:

## அமெரிக்காவில் மருத்துவ கலாநிதிப் பட்டம் [MD] பெற்ற முதல் இலங்கையர்!

○ பா. துவாரகன்

**யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 20**

**சில குறிப்புக்கள்**

**(1865 - 1867)**

யாழ்ப்பாணத்தில் வசித்த மருத்துவர் கிறீனுக்கு 1865 ஆம் ஆண்டு 2 ஆவது பெண் குழந்தை கிடைத்தது. பத்து வயதிலே தாயை இழந்த கிறீன் சிறுவயது முதல் தன்னை அரவணைத்து வளர்த்த லூசி என்னும் மூத்த சகோதரியின் பெயரைத் தனது 2 ஆவது குழந்தைக்குச் சூட்டினார். இந்த ஆண்டு 88 வயதான தனது தந்தை மசாசுசெட்சில் மறைந்த செய்தியை அமெரிக்காவிலிருந்து ஏறத்தாழ 3 மாதங்களுக்குப் பின்னர் கிடைத்த கடிதம் மூலம் கிறீன் அறிந்து கொண்டார். கிறீன் தனது சகோதரர்கள், சகோதரிகள் அனைவருக்கும் தந்தையின் இழப்புக் குறித்து ஆறுதல் வார்த்தைகளைக் கடிதத்திலே எழுதி அனுப்பினார். தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு கிறீன் தனது மூத்த சகோதரர் அன்ரூவுக்கு எழுதிய கடிதத்தில் இடம் பெற்ற அன்பின் மொழிகள் சில இவ்வாறிருந்தன:

"மாட்சிமை தாங்கிய வணங்கத்தக்க ஒரு புதல்வன் பல வருடங்களாகத் தந்தைக்கு அருகேயிருந்து பெருந்தன்மையோடும் கனிவோடும் ஆற்றிய அருந்தொண்டானது அளவிடற்கரியது. வட்டுக்கோட்டையிலே தெருவோரம் நீண்டதூரத்துக்கு பரவி நின்ற ஒரு ஆலமரத்தின் பரந்த அடிமரம் சிதைவடைந்து மண்ணிலே இருந்த பிடிப்பை விட்டபோது, அதன் அருகே கிளைத்து வளர்ந்த 2 ஆவது தண்டின் விழுது, மரத்தை விழவிடாமல் காற்றிலே அசையும் கிளைகளைத் தாங்குவதைப் போன்றது தாங்கள் தந்தைக்கு அருகேயிருந்து ஆற்றிய பணி."

### மருத்துவர் ஜோசுவா இடன்போர்த்

பெரியதம்பி என்னும் பெயருடைய ஜோசுவா இடன்போர்த், மருத்துவர் கிறீனது விருப்பத்துக்குரிய ஒரு மாணவர். தனது சிறந்த மாணவர்களில் ஒருவர் என்று இடன்போர்த்தைக் குறித்துப் பெருமையுடன் கிறீன் பாராட்டியுள்ளார். ஆபத்துக்குதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையில் மருத்துவர் ஜோசுவா இடன்போர்த் சத்திரசிகிச்சை நிபுணராகவும் (Resident Surgeon) சிரேஷ்ட டிஸ்பென்சராகவும் கடமையாற்றியவர். பின்னாளில் வவுனியா விளாங்குளத்திலும் மருத்துவராகக் கடமையாற்றினார். மருத்துவர் ஜோசுவா இடன்போர்த் கிறீனது வேண்டுகோளை ஏற்று துருவிதர் (Druitt) மற்றும் எறிக்சர் (Erichsen) ஆகியோரது சத்திரசிகிச்சைக் கலைநுட்ப நூல்களைத் தமிழாக்கம் செய்து தொகுத்த "இரண வைத்தியம்" என்னும் நூலை கையெழுத்துப் பிரதியாக 1866 இல் உருவாக்கியிருந்தார். மருத்துவர் கிறீன், இடன்போர்த் செய்த தமிழாக்கத்தில் வேண்டிய திருத்தங்களைச் செய்து 504 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் அச்சுப்பிரதியை 1867 இல் மானிப்பாயிலுள்ள அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியிட்டார்.

தமிழில் வெளிவந்த முதலாவது மேலைத்தேய சத்திரசிகிச்சை நூலாக இது கொள்ளப்படுகிறது. இந்நூலுக்கு கிறீன் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூன்முகம் எழுதியிருந்தார். 150 வருடங்களுக்கு முன்னர் கிறீன் தமிழில் எழுதிய நூன்முகம் அக்காலத் தமிழ் வசனநடையையும் ஐரோப்பிய மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்த கிறீனது நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

### இரணவைத்திய நாலுக்கு மருத்துவர் கிறீன் எழுதிய நூன்முகம்:

*இந்தப் புத்தகத்தை மொழிபெயர்த்தவர், துருவிதர் என்னும் மருத்துவர் இயற்றிய இரணவைத்தியசாத்திரப் புத்தக ஒழுங்கின்படி இதை வரிசைப்படுத்தியிருக்கிறார். இதில் அடங்கிய காரியங்களைச் சேர்ப்பதற்கோ ஒரு புத்தகத்தோடு மாத்திரம் நில்லாமல் துருவிதர், எறிக்சர் என்பவர்கள் இயற்றிய புத்தகங்கள் இரண்டிலுமிருந்தெடுத்து அதிகமாகச் சேர்த்திருக்கிறார். இந்தப் புத்தகம் தமிழ்ப்பாஷையில் இருக்கிறது. எவ்வளவு தேவையோ அவ்வளவாய்த் தமிழ்த் தேச வழக்கங்களுக்கும் ஏற்றதாக இருப்பது அவசியம் என்று எண்ணி, தன் சொந்த அப்பியாசத்தில் நல்லதென்று கண்ட சிலவற்றையும் இடைக்கிடை சேர்த்தார்.*

*இந்நூல் எளிதில் விளங்கும் பொருட்டுச் சரீர உறுப்புக்களையும் அவ்வவற்றின் தொழில்களையும் பற்றி முதலிற் சொல்லப்படும். அரும்பதங்கள் இந்நூலிறுதியில் விளக்கப்படும். இந்தப் புத்தகம் ஐரோப்பிய இரணவைத்திய சாத்திரங்களைக் கற்றறிந்தவரின் கீழ் வைத்தியங் கற்கும் மாணாக்கருக்கு உபயோகமாகச் செய்யப்பட்டதாயிருந்தும், தமிழ்ப் பாஷையைக் கற்றறிந்த எவர்க்கும் இது தெளிவாய் விளங்கும் என்பதே துணிவு.*


*இதில் வழங்கிய பரிபாஷைச் சொற்களுள் தமிழ் அதிகம். அது ஒவ்வாதவிடத்து ஆரியமொழி வரும். சில இடங்களில் தமிழ் எழுத்தில் இங்கிலிஷ் மொழியும் வரும்.*

*திருவாளங்கோட்டில் இருக்கும் கனம் பொருந்திய லோ வைத்தியரும் மற்றுஞ் சிநேகிதரும் இதற்குச் செய்த அரிய உதவியை இதைப் பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கிறவர் அதிக நன்றியறிதலுடன் கீர்த்திக்கிறார். பில்லைதெல்பியா நகரிலுள்ள பிளாஞ்சர், லீயர் என்னும் தயாளர் இதிற் காணும் படங்களின் அச்சுக்களைக் கொடுத்ததுக்காக நன்றி சொல்வது தகும்.*

*நோயாளிக்கும் வைத்தியனுக்கும் திருச்சகாயரான இயேசுநாதர் இப்புத்தகத்தைத் தமிழ்ச் சனங்களுக்குக் கிருபையாய் அசீர்வதிப்பாராக.*


*ச.பி.கி*

*யாழ்ப்பாணம், கஅசூஎ (1867)*


SCIENCE AND ART
OF
SURGERY,
COMPILED FROM
ERICHSEN AND DRUITT AND TRANSLATED
BY JOSHUA DANFORTH,
EDITED BY
SAMUEL F. GREEN, M. D.
MEDICAL MISSIONARY.
JAFFNA:
PRINTED FOR THE AMERICAN CEYLON MISSION,
AT THE MANEPAY PRESS.
1867.

மருத்துவர் இடன்போர்த் இரண வைத்தியத்தை தமிழில் மொழிமாற்றம் செய்தமை மருத்துவர் கிறீனுக்கு பேருவகையை ஏற்படுத்தியது. இடன்போர்த் அவர்களது திறமைக்கு மதிப்பளித்து அவருக்கு கௌரவ மருத்துவக் கலாநிதி பட்டத்தை வழங்குவதற்கு வேண்டி கொலம்பிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை வல்லுநர்கள் கல்லூரியின் அப்போதைய அதிபரான மருத்துவர் எட்வேட் டெலபில்ட் அவர்களுக்கு கிறீன் விரிவான ஒரு கடிதம் வரைந்தார். கிறீனது கடிதத்தை ஏற்று கொலம்பிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ வல்லுநர்கள் சத்திரசிகிச்சைக் கல்லூரி, மருத்துவர் இடன்போர்த் அவர்களுக்கு மதிப்புறு மருத்துவக் கலாநிதி (MD) பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. அமெரிக்க மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றில் மருத்துவக் கலாநிதிப் பட்டத்தை பெற்ற முதலாவது இலங்கையர் கதிரேசர் பெரியதம்பி (Padeatamby) என்ற பெயரால் அறியப்பட்ட மருத்துவர் ஜோசுவா இடன்போர்த் அவர்களே. இவர் கிறீனிடம் மருத்துவம் பயின்ற முதல் அணி (1848 - 1851) மாணவர்கள் மூவரில் ஒருவர். கிறீனது மாணவர்கள் என்ற புகழ்பெற்ற புகைப்படத்தில் உள்ள மருத்துவர் ஜோசுவா இடன்போர்த் தவிர மற்றைய அனைவரும் கிறீனது 2 ஆவது அணி (1850-1853) மாணவர்களே என்பது இங்கு மீளவும் நினைவூட்டத்தக்கது.

மருத்துவர் கிறீனும் கொலம்பியா மருத்துவ மற்றும் சத்


மருத்துவர் ஜோசுவா இடன்போர்த்
(கதிரேசர் பெரியதம்பி)

திரசிகிச்சை வல்லுநர்கள் கல்லூரியிலே மருத்துவக் கலாநிதிப் பட்டத்தை பெற்றவர். 1767 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் ககல்லூரியின் பெயர் 2017 இல் கொலம்பிய பல்கலைக்கழக வஜலோஸ் மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை வல்லுநர்கள் கல்லூரி என்று பெயர் மாற்றப் பட்டது.

### மருத்துவர் கிறீனது 7 ஆவது அணி மாணவர்கள் (1867- 1870)

யாழ்ப்பாணத்திலிருந்து 1867 இல் வெளிவந்த உதயதாரகை பத்திரிகையில் தமிழ்மொழி மூலமான 2 ஆவது அணி மருத்துவ மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டது. மருத்துவம் பயில 36 பேர் விண்ணப்பித்தனர். 24 பேர் அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றினர். 13 பேர் மருத்துவம் பயிலத் தகுதிபெற்றனர். இருவர் பயிற்சிக் காலத்தில் வெளியேறினர்.

1. ஏ. அப்பாப்பிள்ளை
2. ஏ. அப்புக்குட்டி
3. ஆறுமுகம்
4. எஸ். சரவணமுத்து
5. வி. சீனிவாசகம்
6. எஸ். சாமிநாதர்
7. எஸ். கந்தவனம்
8. எட்வேட் லோவல்
9. வி. வன்னித்தம்பி
10. விசுவநாதன்
11. எஸ். வினாசித்தம்பி

ஆகியோரே இரண்டாவது அணியில் இறுதி வரை மருத்துவம் பயின்றவர்கள்.

### பேர்சிவல் ஒக்லண்ட் டைக்கின் மறைவு

சேர். பேர்சிவல் ஒக்லண்ட் டைக் அவர்களது சிந்தனையில் 1850 இல் உருவான யாழ். போதனா மருத்துவமனையை நாடி, இன்று வடபகுதியிலிருந்து மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலிருந்தும் புத்தளம், சிலாபம் முதலான இடங்களிலிருந்தும் பொதுமக்கள் சிகிச்சை பெறுவதற்காக வருகின்றனர். யாழ்ப்பாண மக்களால் நேசிக்கப்பட்ட மருத்துவர் கிறீனும் அரச அதிபர் டைக்கும் நல்ல நண்பர்களாக விளங்கினர். 1867.10.09 அன்று டைக்கின் மறைவின் போது அஞ்சலி நிகழ்வில் 2 ஆவதாக இரங்கலுரையாற்றுவதற்காக மருத்துவர் கிறீன் அழைக்கப்பட்டார். ஒக்லண்ட் டைக்கின் பூதவுடல் சுண்டுக்குழியிலுள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

1867 ஆம் ஆண்டு மானிப்பாயிலுள்ள டிஸ்பென்சரியில் 1,316 பேருக்கும் யாழ். நகரிலிருந்த ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் 5,887 பேருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபாகரன் உயிரோடு இருந்தால் மகிழ்ச்சியே. ஆனால்.....?

நேர்கண்டவர்: சோபிகா

**இந்திய இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத், இலங்கைக்கு அண்மையில் வந்திருந்தார். இதன்போது சமகால நிலைவரங்கள், ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் போக்குகள் தொடர்பில் 'சஞ்சீவி' வாசகர்களுக்காக அவர் வழங்கிய நேர்காணல் இது.**

> பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றால் பல சிக்கல்கள் எழும். அவர் மீது இந்தியாவிலும், இலங்கையிலும் பல வழக்குகள் இருக்கின்றன. எனவே பழ.நெடுமாறனின் கருத்து பல பிரச்சினைகளை உருவாக்கும். இலங்கையில் உள்ள மக்கள் பொருளாதாரப் பிரச்சினையில் உள்ளார்கள். அத்துடன் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றால், பயங்கரவாதம் முடிவுக்கு வரவில்லை என்று இலங்கை – இந்திய அரசுகள் அறிவிக்கவும் கூடும்.

**கே: அண்மைக்காலமாக இந்திய அரசியல் தலைவர்களின் வருகை அதிகமாயிருக்கும் சூழலில் உங்களது இலங்கைப் பயணமும் அமைந்திருக்கிறதே. இதன் பின்னணியில் ஒளிந்திருக்கும் இரகசியம் என்ன?**

ப: சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு இந்து மக்கள் கட்சியின் சார்பில் இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற ஐந்து சிவாலயங்களுக்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் அடங்கியகுழுவினர் தரிசனம் மேற்கொள்வதற்காக எனது தலைமையில் இங்கு வருகை தந்துள்ளனர். முதல் நாளன்று முனீஸ்வரத்திலும், இரண்டாவது நாள் திருகோணமலைக்கும் பின்னர் சிவராத்திரியன்று திருக்கேதீஸ்வரர் ஆலயத்திலும் தரிசனம் மேற்கொண்டு அங்கு சமயச் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினோம். அதே போன்று யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும் சிறப்புத்தரிசனம் மேற்கொண்டோம் . அதைவிட, இலங்கைத் தமிழ் ஆன்மிகத் தலைவர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் ஆகியோரையும் சந்தித்து கருத்து பரிமாற்றங்களை நிகழ்த்தினோம். எங்களுக்கான வரவேற்பு ஏற்பாடுகளை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஏற்பாடு செய்திருந்தார். இதைத் தவிர எமது பயணத்தின் பின்னணியில் வேறெந்த இரகசியமும் இல்லை.

**கே: ஆன்மிகப் பயணத்தோடு அரசியல்வாதிகளையும் இங்கு சந்தித்திருக்கிறீர்கள். இதனால் எமது அரசியல் அபிலாஷைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஈழத்தமிழரின் நிரந்தர அரசியல் தீர்வு குறித்து உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன ?**

ப: பதில்: நாங்கள் மேற்கொண்டிருப்பது ஆன்மீகப் பயணம். இந்தப் பயணத்தின் ஊடாக இந்தியா- இலங்கை மக்களுக்கு இடையேயான கலை ,கலாசாரம் ,பண்பாடு , ஆன்மீக உறவுகளை மேம்படுத்தவே விரும்புகிறோம் . இதில் அரசியல் உள்நோக்கம் கிடையாது . ஆனால் இந்தியத் திருநாடு இலங்கை மக்களுக்கு, குறிப்பாக தொப்புள் கொடி உறவுகளான தமிழர்களுக்கு உதவி செய்து நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த முயற்சித்து வருகிறது. இந்திய அரசின் சார்பில் இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதிகளில் பொதுப் போக்குவரத்து மேம்[illegible] போக்குவரத்து, உ[illegible] என்று பல வகையில் இந்திய அரசாங்கம் உதவி செய்து வருகிறது. சமீபத்தில் கூடப் பாரதிய ஜனதாக் கட்சியினுடைய தமிழகத்தலைவர் அண்ணாமலையும், மத்திய அமைச்சர் எல்.முருகனும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து , இந்தியக் கலாசார மையத்தை மக்களுக்கு அர்ப்பணித்தனர். இப்படிப் பல்வேறு விதமான வளர்ச்சிப் பணிகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டு இலங்கை மக்களுக்கு உதவி செய்து வருகிறது. அத்தோடு அரசியல் சட்டப் பிரிவில் உள்ள 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி, தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தி ,ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காணவும் இந்தியா முயற்சி செய்து வருகிறது. இதை இலங்கை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**கே: 13 ஆவது திருத்தத்தை ஈழத்தமிழர்களும் அன்றும் இன்றும் எதிர்க்கிறார்களே, அதற்கு மேலதிகமான தீர்வுத் திட்டத்தை இந்தியா வழங்கும் என நினைக்கிறீர்களா? சந்தர்ப்பம் உள்ளதா?**

ப: 13வது சட்டத் திருத்தம் என்பது நல்ல தீர்வை நோக்கிய ஒரு முதல் படி இதற்கும் மேலதிகமான விஷயங்களைச் செய்வதற்குத்தான் இந்தியா முயற்சித்துக் கொண்டிருக்கிறது ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுமூகமான தீர்வை ஏற்படுத்த இந்தியா முயற்சி செய்து வருகிறது

**கே: இலங்கைப் பயணத்தின் பின்னர், 'வடக்கும் கிழக்கும் மோடியின் கைகளில்'என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்த கருத்தின் அர்த்தம் என்ன என நீங்கள் கருதுகிறீர்கள்?**

ப: வடக்கு , கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகள். இவை இரண்டும் இணைக்கப்பட்டு ஒரு மாகாணமாக உருவானால் தமிழர்களுக்கு அதிகாரம் கிடைக்கும். தமிழர்கள் பெரும்பான்மையாக இருப்பார்கள் . தங்களுடைய பண்பாட்டு அடையாளங்களை மீட்டுருவாக்கம் செய்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும். தற்போதைய சூழலில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் சிறுபான்மையாகி விட்டார்கள். மோசடி மதமாற்றம், இஸ்லாமிய மதப் பயங்கரவாதம் ஆகியவற்றால் தமிழர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது. கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அதிகாரத்துக்கு வர இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்கள் அதிகாரத்தில் இருக்கின்ற சூழல் ஏற்பட்டிருக்கிறது. வடக்கு மாகாணத்திலும் பல பகுதிகளில் மோசடி மத மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மன்னார் மாவட்டத்தில் சைவத்தமிழர்கள் சிறுபான்மையாக மாறி இருக்கிறார்கள். திருகோணமலை , திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளில் சைவத் தமிழர்களின் கோயில்களை ஆக்கிரமிக்கும் போக்கு தொடர்கிறது. இந்த நிலைமை மாறி அமைய வேண்டும் என்கிற நோக்கத்தில் தான் கேதீஸ்வரர் ஆலயத்தை . இந்திய அரசு தனது சொந்தச் செலவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> பழ.நெடுமாறனின் 'பிரபாகரன் உயிரோடு இருக்கிறார்' என்ற அறிவிப்பு தேவையில்லாத ஒன்று என்பதாகவே இலங்கையில் உள்ள பலரும் நினைக்கிறார்கள். நெடுமாறன் சொன்ன செய்திகளின் விளைவு இனிமேல்தான் தெரியவரும்.

பணி செய்தது. அதேபோல பல கோயில்களில்
ய அரசு திருப்பணி செய்து வருகிறது. எனவே
கையிலே நம்முடைய தமிழ் மக்கள் சம உரி
பாடும் சமத்துவத்தோடும் வாழவேண்டும் என்கிற
படையிலேயே தான் அண்ணாமலை அப்படிச்
லியிருக்கிறார்.

**கே: மோசடி மதமாற்றம் என்று அடிக்கடி சொல்கிறீர்களே. அப்படி மோசடி மதமாற்றமென எதைக் கருதுகிறீர்கள்?**

ப: இலங்கையின் வடக்கு , கிழக்கில் கத்தோலிக்கர்களும் இன்ன பிற கிறிஸ்தவ நிறுவனங்களும் மதமாற்றங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். கோயில்களுக்கு அருகாமை
யே குறிப்பாக திருக்கேதீஸ்வர ஆலயக்காணி
கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலத்தை அமைத்து,
திருக்கேதீஸ்வரரின் ஆலய நுழைவு வளை
தகர்த்தெறிந்தார்கள். இன்றுவரை அது கட்டி
கப்படவில்லை. பல இடங்களிலே மதமாற்றத்
காரணமாக நாம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கி
. நம்முடைய மக்கள் தொகை குறைந்து வரு
எனவே இந்தப் பகுதிகளில் மதமாற்றத் தடைச்
கொண்டுவரப்படவேண்டும். இந்துத் தமிழர்கள்
ான்மையாக விடாமல் பாதுகாக்கவேண்டிய
ுப்பு அனைவருக்கும் இருக்கிறது.

**கே: மதமாற்றம் என்பதை விட இங்குள்ள மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பது மதவாதமே. குறிப்பாக பௌத்தமதவாதம் தான் இலங்
பில் தொடரும் இனப்பிரச்சினைக்கு மிகப்
ய காரணம். இந்தியா கொண்டுவந்த 13
து திருத்தத்துக்கு எதிராக பௌத்த பிக்கு
ஆர்ப்பாட்டத்தினை மேற்கொள்கிறார்கள்.
த எரிக்கவும் செய்கிறார்களே?**

ப: 13 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒரு பொதுவான தீர்வை ஏற்படுத்துவதே முதல் படியாகும். இது சிங்கள மக்களுக்கோ, பௌத்த சமயத்தினருக்கோ எதிரானது
. அவர்களுக்கும் இது நன்மை பயக்கக் கூடியது
லும் கூட சில வெளிநாட்டு சக்திகளின் தூண்டு
பேரில் 13 ஆவது திருத்தத்தை ஒரு சில பிக்கு
ள் எரித்துள்ளார்கள். ஆனால் ஒட்டுமொத்த
கை மக்கள் 13 ஆவது திருத்தம் அமுலுக்கு வந்து
வரும் சமமாக சமத்துவத்துடன் ஒற்றுமையாக
வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்பதையே
புகிறார்கள். இதையே இந்திய அரசாங்கமும் வலியு
கிறது.

**கே:** பலாலியூடான இந்திய - இலங்கை விமானசேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்தியாவில் இருந்து அரசியல்வாதிகளின் குறிப்பாக மத்திய அமைச்சின் உறுப்பினர்களின் வருகை அதிகரித்துள்ளது. இதன் காரணம் என்ன?

பதில்: பலாலி விமான நிலையத்தில், விமானப் போக்குவரத்து தொடங்கியதன் மூலம் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு - குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிக்கு - நேரடியாக வந்து செல்லமுடிகிறது. அதேபோல யாழ்ப்பாணப் பகுதியிலிருந்தும் மக்கள் இந்தியாவுக்கு வந்து செல்ல நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது. இலங்கையின் பொருளாதார விஷயம் நெருக்கடிக்குள்ளாகி இருக்கிற இந்த நேரத்தில் சர்வதேசத் தொடர்புகளுக்கும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது மேலும் வலுவூட்டும். பலாலி விமான நிலையம் 'உண்மையான' சர்வதேச விமான நிலையமாக விரிவாக்கம் செய்யப்படுவது இலங்கைக்கு மிகவும் நன்மை பயக்கக் கூடிய விஷயம் இது தொடர்பில் இந்தியாவும் கடும்முயற்சியை மேற்கொண்டுள்ளது. அந்த முயற்சி விரைவில் வெற்றி அடையும் . இதேபோல இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான கப்பல் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்படவேண்டும். மீனவர் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவேண்டும். இவை குறித்து இந்திய அரசாங்கம் நல்ல முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது . தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கமும் ஓரளவுக்கு இதை ஆதரித்து வருகிறது . அநேகமாக இந்த விஷயங்கள் எல்லாம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்று நான் கருதுகிறேன்.

**கே: இந்தியா கொண்டுவரும் திட்டங்களுக்கு தடை போடப்படுவதோ, அல்லது அவை நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்படுவதோ இலங்கையில் தொடர்கதையாகியுள்ளது. உதாரணமாக சர்வதேச தரத்துக்கு பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இந்தியா நிதியுதவி செய்யத்தயாராக இருந்தும், அதைச் செயற்படுத்த இலங்கை இழுத்தடிப்பதற்கான காரணம் என்ன ?**

ப: இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்கள் இலங்கையில் செயற்படுத்தப்படுகிறபொழுது இலங்கை அரசு அதை இழுத்தடிப்பதாக சொல்கிறீர்கள் . அப்படி என்ன தடைகள் இருந்தாலும் அந்தத் தடைகள் எல்லாம் நீங்கும். எந்த ஒரு விஷயத்தையும் எளிமையாக நடைமுறைப்படுத்த முடியாது . ஒரு நல்லது நடக்கும் என்று சொன்னால் இப்படியான எதிர்ப்புகள் வரத்தான் செய்யும் .அந்த எதிர்ப்புகளை இலாவகமாகக் கையாண்டு சுமுகமாக அந்தத் திட்டங்களை நிறைவேற்ற இந்தியா தொடர்ந்து உழைக்கும்.



**கே: காங்கேசன்துறை - காரைக்கால் படகு சேவை அண்ணளவாக எப்போது ஆரம்பிக்கப்படும்?**

ப: திருவாதிரை நன்னாளில் பாரம்பரிய வழிபாட்டுக்கு சிதம்பரத்துக்கு இலங்கை மக்கள் வந்து செல்வது வழக்கம். அதேபோல இந்தியாவில் இருந்தும் சிவ ஆலயங்களைத் தரிசிக்க பலரும் இலங்கைக்கு வருகிறார்கள். எனவே எதிர்வரும் மார்கழி மாதத்துக்குள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க வேண்டும். அதற்கு ஏற்றற் போல் இருநாட்டு அரசுகளும் முயற்சிஎடுத்து வருகின்றன.

**கே: மன்னாரில் சீனாவின் வருகைக்குப் பிறகு இந்திய அரசின் பார்வை மன்னார் பக்கம் திரும்பியுள்ளதாகத் தெரிகிறதே?**


ப: சீன அரசாங்கம் எப்பொழுதும் தனது மேலாதிக்கத்தை இலங்கை மீது செலுத்தி தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள முயற்சிக்கிறது அந்த வகையில் இலங்கையில் மன்னார்ப் பகுதியிலும் சீனா நுழையமுயல்கிறது. ஆனால் அதற்கு முன்பாகவே மன்னார்ப் பகுதியில் - சிவபூமியான இந்தப்பகுதியில் - கத்தோலிக்கர்கள் மதமாற்றத்தின் மூலமாக பெரும்பான்மையாகிவிட்டார்கள். அரசியலிலும் அவர்களின் ஆதிக்கம் இருக்கிறது. இந்தப் பகுதியில் சைவத்தமிழர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது.

**கே: தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று பழ. நெடுமாறன் அண்மையில் அறிவித்திருக்கிறார். அது குறித்து..?**

ப: பழ.நெடுமாறன் அப்படியொரு அறிவிப்பை வெளியிடும்போது, காசியானந்தனும் அந்த கூட்டத்தில் பங்கெடுத்திருந்தார். நெடுமாறன் புதிதாக இந்தக் கருத்தைக் கூறவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னரும் பழ.நெடுமாறன் இதே கருத்தைக் கூறினார். அப்போது வைக்கோ கூட இருந்தார். அந்தக்கருத்தை பலரும் ஆமோதித்தார்கள் . அதற்குப் பின்னரும் பல சந்தர்ப்பங்களில் பழ.நெடுமாறன் இதே கருத்தை வெளிப்படுத்தினார் . ஆனால் இம்முறை அவரின் கருத்துக்கு பல தரப்புகளில் இருந்தும் எதிர்வினைகள் வரத் தொடங்கியுள்ளன. குறிப்பாக சீமான் உட்பட திராவிட இயக்கங்களைச் சார்ந்து இருப்பவர்கள் 'பிரபாகரன் உயிருடன் இருக்க வாய்ப்பு இல்லை. இருந்தால் நன்று'எனத் தெரிவிக்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வாரு விதமாகச் சொல்கிறார்கள். எம்மைப் பொறுத்தவரையில் பிரபாகரன் உயிரோடு இருந்தால் மகிழ்ச்சிதான். ஆனால் இந்த நேரத்தில் இந்தச் செய்தியை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியம் என்ன என சிந்தித்துப் பார்க்கவும்வேண்டும். புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான காலம் தற்போது கனிந்து வந்துகொண்டு இருக்கிறது. அது தொடர்பான வழக்கு சர்வதேச நீதிமன்றிலும் , இந்தியாவிலும் நடந்துகொண்டு இருக்கிறது. அதேபோல இந்தியா இன்று இலங்கை மக்களுக்கு நன்மை செய்வதற்காக ஒரு தீர்வை நோக்கிய முதற்படியாக, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற அரசியல் நிர்ப்பந்தத்தை இலங்கை அரசுக்கு கொடுத்துக் கொண்டு இருக்கிறது. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இந்தத் தருணத்தில் இந்தியா நிறைய உதவிகளைச் செய்து வருகிறது. இவ்வாறான நிலையில் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றால் பல சிக்கல்கள் எழும். அவர் மீது இந்தியாவிலும், இலங்கையிலும் பல வழக்குகள் இருக்கின்றன. எனவே பழ.நெடுமாறனின் கருத்து பல பிரச்சினைகளை உருவாக்கும். இலங்கையில் உள்ள மக்கள் பொருளாதாரப் பிரச்சினையில் உள்ளார்கள். அத்துடன் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றால், பயங்கரவாதம் முடிவுக்கு வரவில்லை என்று இலங்கை இந்திய அரசுகள் அறிவிக்கவும்கூடும். எனவே பழ.நெடுமாறனின் 'பிரபாகரன் உயிரோடு இருக்கிறார்' என்ற அறிவிப்பு தேவையில்லாத ஒன்று என்பதாகவே இலங்கையில் உள்ள பலரும் நினைக்கிறார்கள். நெடுமாறன் சொன்ன செய்திகளின் விளைவு இனிமேல்தான் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்





**ச.நருசிகன்**
தரம் - 5
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்



**எஸ்.இலக்கியன்,**
தரம் - 2
கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயம்



**மூ.அட்ஷயா**
தரம்- 10
(யா/இந்து மகளிர் கல்லூரி)



**எஸ்.ஹரினி,**
தரம்- 2
(யா/உடுவில் மகளிர் கல்லூரி)



**கே.மதுமிதா,**
தரம்- 8
(யா/வரணி மத்திய கல்லூரி)



## ஆபத்து வேளையில் புத்திக்கூர்மை வேண்டும்

காட்டில் ஒரு சிங்கம், ஒரு ஆட்டை அழைத்தது.
"என் வாய் நாறுகிறதா என்று பார்த்துச்சொல்" என்று கேட்டது. ஆடு முகர்ந்து பார்த்துவிட்டு, "ஆமாம், நாறுகிறது" என்று கூறியது.
உடனே சிங்கம், "முட்டாளே, உனக்கு எவ்வளவு திமிர்" என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது.
அடுத்து சிங்கம் ஓர் ஓநாயை அழைத்து அதனுடைய கருத்தைக் கேட்டது.
ஓநாய் முகர்ந்து பார்த்துவிட்டு, "கொஞ்சம் கூட நாறவில்லை," என்றது. சிங்கம்," மூடனே, பொய்யா சொல்கிறாய்?" என்று கூறி அடித்துக் கொன்றது. பின்னர் ஒரு நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது. அதற்கு நரி, "நாலு நாளா கடுமையான தடிமன். அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை." சிங்கம் நரியை விட்டுவிட்டது. புத்திசாலிகள் ஆபத்துக் காலத்தில் வாயைத் திறக்கமாட்டார்கள்.



## சஹாரா பாலைவனம்

சஹாரா பாலைவனம் பூமியின் மிகப்பெரிய வெப்பப் பாலைவனம். ஆபிரிக்கக்கலாசாரம், வரலாறு போன்றவற்றில் சஹாரா முக்கியப் பங்கு வகித்துள்ளது.
சஹாரா பாலைவனம் வட ஆபிரிக்காவில் உள்ளது. இது அட்லாண்டிக் பெருங்கடலில் இருந்து செங்கடல் வரை வட ஆபிரிக்காவின் பெரும்பகுதியை உள்ளடக்கியது. எகிப்து, லிபியா, துனிசியா, அல்ஜீரியா, மொராக்கோ, மேற்குசஹாரா, மொரிட்டானியா, மாலி, நைஜர், சாட், சூடான் உள்ளிட்ட 11 நாடுகளின் பகுதிகளை சஹாரா உள்ளடக்கியிருக்கிறது.
சஹாரா ஒரு நாடாக இருந்தால், அது உலகின் ஐந்தாவது பெரிய நாடாக இருக்கும். பிரேஸிலை விடப் பெரியது, அமெரிக்காவைவிடச் சற்றுச்சிறியது. சஹாரா பாலைவனம் பூமியில் மிகவும் வெப்பமான இடங்களில் ஒன்று.
சஹாராவின் வெப்பநிலை எந்த ஓர் உயிரினமும் வாழ்வதற்கு கடினமான சூழலாக இருக்கிறது. இது சூடாகவும் வறண்டதாகவும் இருக்கும். சஹாராவில் அரிதாகவே மழை பொழியும்.
முன்பொரு காலத்தில் சஹாரா, தாவரங்களும் விலங்குகளும் வாழ்ந்த பசுமையான பகுதியாக இருந்திருக்கிறது. சுமார் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வறண்டு போக ஆரம்பித்தது.



**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## சுற்றாடல் ஒழுக்க நெறிக்கோவை

- சுற்றாடல் முன்னோடி தாய்நாடு, பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தை மதிப்பவராகவும், போற்றுபவராகவும் காணப்படுவார்.
- மிகவும் சிக்கனமான எளிய வாழ்வுப்பாணியொன்றை நோக்கிச் செல்வார்.
- சுற்றாடல் முன்னோடி உண்மைக்கு மதிப்பளிப்பவர். நேர்மையானவராக இருப்பார். கருணை உள்ளம் கொண்டவராக விளங்குவார்.
- அனைவருடனும் போல் மரஞ்செடிகொடிகளுடனும் விலங்குகளுடனும் அன்பாகவும் பிரியமாகவும் இருப்பார்.
- தன்னைப் போல் பிறரையும் சமத்துவமாக நடத்துவார்.
- ஆன்மிக ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் சுற்றாடலின் தூய்மையை நேசிப்பார்.
- சுற்றாடலை பாதுகாப்பதில் பிறரிடமிருந்து தோன்றுகின்ற, காணப்படும் தடைகளை பொறுமையாக கையாள்வார்.
- எப்போதும் மகிழ்ச்சியாகவும் பிறரின் நலனுக்காகவும் செயற்படுவார்.



**சி.பரணிகா**, தரம் 8
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்



சுழியன்

## பெருமிதம்

பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து விரைவில் ஓய்வு பெறவுள்ள சி.டி. விக்ரமரத்ன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

" வாருங்கள் பொலிஸ்மா அதிபரே, நீங்கள் விரைவில் ஓய்வுபெற உள்ளதாக அறிந்தேன். உங்களுக்கு நான் ஏதும் செய்ய வேண்டுமா?" என ஜனாதிபதி இதன்போது கேட்டுள்ளார்.

" சேர்! எனக்கு எதுவும் வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் எண்ணம்போல் செயற்படலாம்." என்று பொலிஸ்மா அதிபர் பதிலளித்துள்ளார்.

" பொலிஸ்மா அதிபர் போன்ற முக்கியமான பதவிகளை வகிப்பவர்கள், தமது பதவிகாலத்தை தற்காலிகமாக நீடித்துக்கொள்ளவே முற்படுவார்கள். அது தொடர்பில் அரச தலைவர்களுக்கு அழைப்புகள் வருவதும் வழமை. ஆனால் நீங்கள் அப்படி முயற்சிக்கவில்லைபோலும். எந்த அரசியல் வாதியும் என்னை தொடர்புகொள்ளவில்லையே..." என ஜனாதிபதி சிரித்தபடியே கூறியுள்ளார்.

" சேர், பதவி என்பது நிரந்தரமில்லை. விடைபெறும்போது மகிழ்ச்சியாக செல்ல வேண்டும். இலங்கையில் சுமார் 25 வீதமான பகுதிகளுக்கே நான் சென்றுள்ளேன். எஞ்சிய பகுதிகளுக்கும் மனைவியுடன் சென்று, மீதமுள்ள காலத்தை இன்பமாகக் கழிக்கவே விரும்புகின்றேன். பதவிக் காலத்திலும் அரசமைப்பின் பிரகாரம் செயற்பட்ட ஆத்ம திருப்தி உள்ளது." என்று பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

சந்திப்பு முடிந்த பிறகு அங்கிருந்து பொலிஸ்மா அதிபர் விடைபெற்றார். அவ்வேளையில் தனது ஆலோசகர் ஒருவரிடம், " பார்த்தீர்களா இந்த மனிதனின் பண்பை, இப்படியானவர்களே பாதுகாப்புத்துறைக்கு வேண்டும்" என்று சொல்லி பொலிஸ்மா அதிபர் குறித்து பெருமிதம் அடைந்தாராம் ஜனாதிபதி.

## பதவி

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு கிடைத்த கையோடு, அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள் இடம் பெறவுள்ளன.

ஐ.எம்.எப். கடன் இம்மாத இறுதிக்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், ஏப்ரல் முதல் வாரத்துக்குள் இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது.

இதன்போது மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எட்டு பேருக்கு புதிதாக அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சிலருக்கும் பதவிகள் வழங்கப்படவுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்த, சஜித் அணி உறுப்பினர்கள் சிலர் இது பற்றி கலந்துரையாடியதாகவும் தகவல்.

## கட்டளை

" தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன சிறப்பாகச் செயற்படுகின்றார். எனவே, அந்தப் பதவியில் மாற்றம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை..." என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவதற்கு ஆளுங் கட்சியில் உள்ள சிலர் முயற்சித்துவருகின்றனர். இந்நிலையில் இது சம்பந்தமாக மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு அதிகாரிகள் ஊடாக, அவருக்கு தூது அனுப்பட்டுள்ளதாம். இதுபற்றி கேள்வியுற்றதும், பிரதமர் பதவியில் மாற்றம் மேற்கொள்ளவேண்டிய தேவை எழவில்லை என திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார் மஹிந்த. அத்துடன், இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை கைவிடுமாறும் அவர் கட்டளையிட்டுள்ளாராம்.

## திட்டம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகரவை விரட்டுவதற்கு, அரசு பக்கம் உள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் திட்டம் தீட்டி வருகின்றனராம்.

இதன்படி கட்சி தலைவரான மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்து, இது சம்பந்தமாக கோரிக்கையொன்றை விடுப்பதற்கு நிமால் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர உட்பட அரசு பக்கம் உள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனராம்.

கட்சித் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்பட்டாலும், தயாசிறி ஜயசேகரவே தலைவர் போல் செயற்படுவதாகவும், மைத்திரிபால சிறிசேன பொலநறுவைக்குள் முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டவுள்ளனர். தயாசிறி ஜயசேகரவை பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கினால், மீண்டும் கட்சிக்குள் வருவதற்கு அவர்கள் பச்சைக்கொடி காட்டவுள்ளனராம்.ன

இவர்களின் கோரிக்கையை ஏற்று, தயாசிறிக்கு எதிராக மைத்திரி நடவடிக்கை எடுத்தால், தயாசிறி, திலங்க சுமதிபால போன்றவர்கள் 'ஹெலிகொப்டர்' அணியின் பக்கம் செல்லக்கூடும் என அரசியல் வட்டாரங்களில் அரசல் புரசலாகப் பேசப்படுகிறது.



கோகுலராகவன்

# காலம்



## சாந்தனுக்கொரு பாட்டெழுதும்!

பாடகர் சாந்தனை என்னுடைய பத்து, பன்னிரெண்டு வயதில் தெரியும். அது 1985, 1986 ஆம் ஆண்டுகளாக இருக்கலாம்.

நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயத்தில் திருவிழாக்களில் சப்பறத்திருவிழா அல்லது வேட்டை திருவிழாவுக்கு பாட வருவார். ஒரு ஆர்மோனியம், ஒரு டோல்கி இவையிரண்டும்தான் பக்க வாத்தியம் .பெண் பாடகிகள் இன்றி தனியாகப் பாடுவார். மாமா முறையான ஒருவர் அறிவிப்பாளராக இருந்தார்.

சாந்தன் பக்திப் பாடல்களும் சில தத்துவப் பாடல்களும் பாடிய ஞாபகம். பக்திப் பாடல்கள் அநேகமாக சீர்காழியின் பாடல்களாக இருக்கும். மதுரை சோமுவின் "மருதமலை மாமணியே" பாடலுக்கு உயிர் கொடுத்து பாடுவார். அப்போதே அவரின் குரலில் ஒரு வசீகரம் இருந்தது.

மற்றபடி நாகர்கோயில் நாகதம்பிரான் கோயிலில் பிரபல்யமான திருவிழாக்களான கப்பல் திருவிழாவிலோ அல்லது தீர்த்தத் திருவிழாவிலோ பாடுவதற்கு அந்தக்காலத்தில் அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவரிடம் அப்போது இருந்த இசைக்குழு சிறியதாக இருந்தமையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். அத்தோடு அவரது பிரபல்யம் அவர் வசித்த எழுதுமட்டுவாழுக்கு அப்பால் பரவியும் இருக்கவில்லை.

1987 அல்லது 1988 இல் "ஈழத்து சௌந்தரராஜன்" என்கின்ற "நாகர்கோவில் விஜயன்" என்கிற பாடகருக்கும் சாந்தனுக்கும் எழுதுமட்டுவாழில் அவர்களது இரசிகர்களால் ஒரு பாட்டு போட்டி வைக்கப்பட்டது.

அதிலும் நாகர்கோவில் விஜயன் வெற்றி பெற்றார் என்றே ஞாபகம்.

இடையில் "அக்னி புத்திரன்"(பெயர் மாறி இருக்கலாம்) என்ற தலைப்பில் ஒரு திரைப்படமும் தயாரித்தார். அது வெளிவரவில்லை.

சில காலத்துக்கு பிறகு திடீரென அவரது குரலில் "இந்த மண் எங்களின் சொந்த மண் "எனும் பாடல் அவர் குரலில் கண்ணன் மாஸ்டரின் இசையில் பட்டிதொட்டி எல்லாம் ஒலித்த போது ஒரு பிரபல்யமான பாடகராக மாறினார்.



# இருந்து கதைப்பம்

அதன்பின் உச்சம் தொட்ட பாடகராக அதிக இரசிகர்கள் அவரை இரசிக்க தொடங்கினர்.

"ஆதியாய் அநாதியாய் அவதரித்த செந்தமிழ்"
"வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்"
"எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகிறோம்"
"ஆழக்கடலெங்கும் சோழ மகராஜன்."

போன்ற பாடல்கள் சாந்தனுக்கு அதிக பிரபலத்தை நம்மிடையே உருவாக்கின.

தனக்கென்று ஒரு பாடும் பாணியை உருவாக்கி வைத்திருக்க சாந்தன் தவறி விட்டார் என்றே எனக்கு தோன்றுகிறது.

எடுத்த வீச்சில் எந்தப்பாடலையும் உச்சஸ்தாயினிக்கு போய் பாடும் அவரது பாணி சில வேளை எனக்கு எரிச்சலை தந்திருக்கிறது. அவரது முதற்பாடல் போல ஏனைய பாடல்கள் அவரால் பாடப்படவில்லை என்பதே என் அனுமானம்.

ஆனால் அதன் பின் முதன்முதலாக அவர் பக்திப் பாடல் ஒன்றைப் பாடினார்.

அதுவே அவரது புகழை இன்றுவரை நிலைக்க வைக்க வேண்டிய பாடலாக மாறியது என்பது காலத்தின் ஒருவகைத் துயரம். "பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார். " என்ற பாடல் அந்த பக்திப் பாடல் அவரது பாடகன் வாழ்வில் முக்கியமானது.

இன்று வரை கோயில்களில் ஒலிக்கும் சந்தர்ப்பத்தை பெற்ற மங்காப் புகழ் பெற்ற பாடல் அது .

நாதஸ்வர வித்துவான்கள் இன்றும் விரும்பி வாசிக்கும் பாடலும் கூட.

அந்தப் பாடலை சாந்தன் சீர்காழி கோவிந்தராஜனின் சாயலில் சாந்தன் பாடியிருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை .

அவர் சீர்காழியை மனதில் நினைத்துக்கொண்டு பாட விரும்பியது அவரது தனித்துவமான குரலுக்கு ஓர் அடையாளத்தைத் தராமல் போய் விட்டது. ஆனால் அவருக்கு நிராகரிக்க முடியாத புகழை தந்த பாடல்களில் இதுவுமொன்று என்பதில் மறுப்பில்லை. வன்னி யுத்தத்தின் பின்னரும் அவர் ஒரு இசைக்குழுவை தனது பெயரில் இயக்கி பாடிக்கொண்டு இருந்தார்.

மீண்டும் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தில் 2014 இல் கப்பல் திருவிழாவுக்கு பாட வந்திருந்தார். முன்னர் இந்தப் பிரபல்யமான திருவிழாவில் பாடக் கிடைக்காத வாய்ப்பு பின்னர் கிடைத்தபோது அவர் பெருமைப்பட்டிருக்கக் கூடும். அன்றும் தன்னுடைய "பிட்டுக்கு மண் சுமந்த" என்ற பாடலோடு தனது கச்சேரியை ஆரம்பித்திருந்தார். போருக்குப் பின்னர் அவரிடம் எஞ்சி இருந்த பாடல் அது ஒன்று மட்டும்தான்.

பின்னர் ஈழ ஆலயங்களுக்காக அவர் பாடிய பல பக்திப் பாடல்கள் கூத்து மெட்டுக்களை அடிப்படையாக கொண்டே பாடப்பட்டன. இந்த முயற்சியானது அவரை ஒரு இசை வெறுமையை நோக்கித் தள்ளியதை அவர் உணரவில்லை.

ஒரு காலத்தில் "இந்த மண் எங்களின் சொந்த மண் புகழ் சாந்தன்" என்கிற அவருக்குரிய அடையாளத்தை அவர் பயன்படுத்த முடியாத நிலை பின்னர் இருந்தது. ஆனாலும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் தென்னிந்திய இசையமைப்பாளர்கள் மட்டுமே இசையமைத்து பாடல்களை வழங்க வேண்டுமென இருந்த நிலையை மாற்ற யாழ்ப்பாணத்தில் உருவான பாடகராக சாந்தன் இருந்தார் என்பதை மறுக்கவே முடியாது.

தீவிர நோய்வாய்ப்பட்டு இறந்த போது அவர் பெற வேண்டிய புகழ், மரியாதை என்பன அவருக்கு கிடைக்கவில்லை என்பது கால மாற்றத்தின் துயரமே. "இசைக்காக மேடையில் இறந்து போகவும் தயார் "என்ற ஆதங்கத்தோடு அவர் தனது இறுதி நாட்களில் மேடைகளில் பாடிக்கொண்டு இருந்தார். ஒரு காலத்தின் முக்கியமான பாடகன். அந்த நாட்களில் ஓடி ஓடி பாடிக்கொண்டிருந்தவன் என்பது இந்த மண்ணுக்குத் தெரியும். அவனது பாடல்கள் தொலைந்து போய்விட்டன என்பதற்கு அவன் மட்டும் காரணமல்ல, காலமும் தான்.

அந்தக் காலம் எப்போதோ ஒருநாள் சாந்தனுக்குப் பாட்டெழுதும்! *(இன்னும் கதைப்பம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 நேர்காணல் கடவுள்

○ இராகவன்



கறுப்பு வெள்ளைக் கனவுக்கு முன் வந்திருந்தோர் வரிசையில் மேலும் நால்வர் சேர்ந்து கொண்டனர்.

"கட்டணங்களை அறவிட்டு உடனடியாக எங்களைக் கனவு காண நடவடிக்கை எடுங்கள்" என வண்ணக் கனவுகளுக்காக முன் வந்திருப்போர் வரிசையில் முதலாளாக நின்று கொண்டிருந்த பதின்ம வயதுக்காரன் கத்தினான்.

"உங்களுக்கான கனவுகளை வடிவமைக்கும் வேலைகள் நிறைவடையும் கட்டத்திலுள்ளன. இன்னும் சற்று நேரத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று அவள் ஒலிபெருக்கியில் அறிவிப்புச் செய்தாள். முதலில் வண்ணக் கனவுகளுக்காக வந்திருப்போரிடம் கட்டணத்தை அறிவிட்டு நிகழ்வினை ஆரம்பித்தாள்.

"கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்குப் போதுமானவர்கள் வந்து சேரும் வரை அவசியமேதுமின்றிக் காத்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாமே? "என்று நான் அவளிடம் மெதுவாகக் கேட்டேன்.

"இதுவுமொரு நல்ல முன்மொழிவு தான். ஆனால் இறுதித் தீர்மானமெடுக்கும் அதிகாரம் எனக்கில்லையென்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" எனப்பதில் சொல்லிவிட்டு அவள் மாயமாகி விட்டாள். இவ்வாறாக சற்று நேரங்கடந்த பின் கறுப்பு வெள்ளைக் கனவுக்கு முன் வந்திருப்போர் வரிசையில் மேலுமொருவர் இணைந்து கொண்டார். இப்போது அந்த வரிசையில் மொத்தமாக நின்று கொண்டிருந்த எட்டுப்பேரையும் நுணுக்கமாக அவதானித்தேன். ஒருவர் கூடப் பெண்ணாக இருக்காததும் அனைவருமே பதின்ம வயது மதிக்கத்தக்க ஆண்களாக இருந்ததும் எனக்குச் சற்று வியப்பாக இருந்தது. இதற்கென காரணத்தை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக நெருங்கினேன். வரிசையில் முதலாமாளாக நின்று கொண்டிருந்தவன் என்னைப் பார்த்ததும் புன்னகைத்து விட்டு "என்ன கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்காகப் பெண்கள் எவரும் முன்வராததற்கும், நாங்கள் அனைவரும் பதின்ம வயதினராக இருப்பதற்கும் காரணம் வேண்டுமா?" எனக் கேட்டான். நான் பதில் சொல்வதற்கிடையில் அவனே தொடர்ந்து சொன்னான்.

" நாங்களும் சில நாள்களுக்கு முன்பாக வண்ணக் கனவுகளுக்காக இங்கே வந்திருந்தவர்கள்தான். இங்கே வரும் போது வயோதிபத்தைத் தொட்ட பெண்களாக இருந்தோம். நாங்கள் எதிர்பார்த்து வந்திருந்த வண்ணக் கனவுகளைக் கண்டு பரவசமுற்றோம். அத்தோடு முடித்துக் கொண்டிருக்கலாம். எது நிகழவேண்டியிருக்கிறதோ அது தானே நிகழும்? கனவுகள் முடியுந் தருணத்தில் இப்போது நாங்கள் பதின்ம வயதுப் பையன்களாக இருந்தால் எவ்வளவு சிறப்பாகவிருக்கும்? என அங்கலாய்த்துக் கொண்டோம். கனவுகள் முடிவுற்று விழிப்பு நிலைக்கு வந்ததும் இந்தத் தோற்றத்துக்கு மாறிவிட்டோம் எங்களுக்கெல்லாம் கணவர், பிள்ளைகள் பேரப்பிள்ளைகளெனப் பெரிய குடும்பங்களிருக்கின்றன. இந்தத் தோற்றத்தில் வீடுகளுக்குச் செல்ல முடியாமல் ஏதிலிகளைப் போல் இங்கேயே கனவுகளைக் கண்டிருந்த நாளிலிருந்து அலைந்து கொண்டிருக்கின்றோம். எங்களது குடும்பத்தினர் நாளிதழ்களில் எங்களைக் காணவில்லையெனப் புகைப்படங்களுடன் விளம்பரங் கொடுத்துத் தேடிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் நாங்கள் எந்த முகத்தோடு அவர்களிடம் சென்று எங்களைப் பற்றி விளக்குவது? அப்படி விளக்கிச் சொன்னாலும் அவர்களால் இதை ஏற்றுக் கொள்ளமுடியுமா? அதனாலேயே நாங்கள் கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்காக முன்வந்தோம். எங்களது கனவுகள் முடியுந்தருணத்தில் இதற்கு முந்திய அதாவது பழைய தோற்றத்தினை விரும்புவதன் வழியே அதைப் பெறலாமென நம்புகிறோம்" என அவன் சொல்லி முடித்த போது தான் எனக்கு நிலைமை புரிந்தது.

கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்காக முன் வருவோர் எண்ணிக்கை இனியும் அதிகரிக்கச்சாத்தியமில்லையென்பதால் எனக்குச் சடுதியாக ஒரு புதிய எண்ணம் தோன்றியது. இன்னுமிருவர் மட்டுமே கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்கெனத் தேவைப்படுவதால், அவளும் நானும் இதற்குள் சேர்ந்து கொண்டால் எல்லாம் நிறைவேறி விடுமெனத் தோன்றியது. அவளைத் தேடினேன். எங்கேயும் அவள் தென்படுவதாக இல்லை. வண்ணக் கனவுகளுக்காக வந்திருப்பவர்கள் கூச்சலிடத் தொடங்கினர். "நிகழ்வினை உடனடியாகத் தொடங்குங்கள் காத்திருந்து காத்திருந்து பொறுமையிழந்து விட்டோம். அளவுக்கதிகமாக ஆள்கள் வந்துவிட்ட பின்னும் எதற்காகத் தாமதம்? தகுந்த பதிலளிக்கத் தவறினால் இதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல" அவர்கள் என்னைத் தான் இந்நிகழ்வுக்கு முழுப்பொறுப்பானவன் எனக் கருதிக் கொண்டு என்னை நோக்கியே கூச்சலிட்டனர்.

அவ்விடத்தில் தொடர்ந்தும் நின்று கொண்டிருப்பது புத்திசாலித்தனமானதல்ல எனக் கருதி மெல்ல மெல்ல அவ்விடத்தை விட்டு நகர்ந்து உட்புக முயன்றேன். அத்தருணம் ஒலிபெருக்கியில் அவள்.

" அமைதி !அமைதி ! இதோ நீங்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிகழ்வு இன்னும் சொற்ப வேளையில் இனிதே ஆரம்பமாகவுள்ளதென்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்" என கோலாகலமாக அறிவித்தாள். கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்கான இரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நான் அவளிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அவள் இணங்கினாளா? அவள் இறுதியாக ஒலிபெருக்கியில் அறிவித்திருந்ததைப் போல் திட்டமிட்டபடியே கனவுகளும் நிகழ்வு தொடங்கியதா? கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்காக முன்வந்திருந்த அந்த எட்டுப்பேரும் முன்னைய தோற்றத்தைப் பெற்று வீடு திரும்பி உறவினர்களுடன் சேர்ந்து கொண்டார்களா? நான் எவ்விதம் அங்கிருந்து வெளியேறினேன் என அடுக்கடுக்காக எழும் கேள்விகளுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்தால் விரிவாகப் பதிலளிக்கலாமென எண்ணுகிறேன். ஏனெனில் இப்போது இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் உடனடியாக விரிவாகப் பதிலளிக்க முடியாத நிலையிலிருக்கிறேன் என்பதை மனவருத்தத்துடன் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதன் பின்னர் அவளும் நானும் எந்தவொரு கனவிலும் சந்தித்துக் கொள்ளவில்லையென்பதற்கு விசேட காரணமேதுமில்லை. அதுவும் தற்செயலாக நிகழ்ந்ததொன்று தான். அவளைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்ட கனவுகள் சம்பவித்த போதிலும் நானதைச் சொல்லவில்லை. அவளுக்கும் இதே நிலையேற்பட்டிருக்கலாம் . அப்போது அவளும் என்னைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டவில்லையெனக் கருதுகிறேன். இதுவொரு மேலதிகமான தகவலாகும்.

அவளும் நானும் எந்தவொரு கனவிலும் சந்தித்துக் கொள்ளவில்லையென்பதற்கு விசேட காரணமேதுமில்லை. அதுவும் தற்செயலாக நிகழ்ந்ததொன்றுதான். அவளைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்ட கனவுகள் சம்பவித்த போதிலும் நானதைச் சொல்லவில்லை.

# வாசிப்பு?

சித்திரக்கதைகள், மர்மநாவல்களிலிருந்து தொடங்கிய கதை இன்றுவரை தொடர்கிறது. இதில் உச்சக்கட்டமொன்று வந்தபோது தேடித்தேடி வாசிக்கும் நிலையிருந்தது. புத்தகங்களை இரவல் வாங்கி மடக்கி வைக்கும் இயல்பு ஒருபோதும் என்னிடம் இருந்ததில்லை. ஒருவேளை என்னிடம் போதுமான இடவசதியிருந்தால் மடக்கிவைத்திருப்பேனோ தெரியவில்லை. எவரிடமிருந்து இரவல் வாங்குகிறேனோ அவருக்கு குறித்த திகதியில் உறைபோட்டுப் புத்தகங்களைத் திருப்பிக்கொடுத்து விடுவதை இன்றும் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறேன். ஆனால் இப்போது வாசிப்பின் தேய்வுக்கட்டத்தில் நானிருப்பதால் தேடித்தேடி வாசிக்க முற்றாக தவிர்த்து விட்டேன் . தேய்வுக் கட்டத்துக்கு வந்தடைவதற்கு முன்பாகவே இது படிப்படியாக நிகழத்தொடங்கியது. நான் இரவல் பெற்று வாசிக்கும் நபர்களில் அநேகர் ஒருகட்டத்தில் என்னைப் புத்தகங்களை மடக்குபவனாகக் கருதி நேரடியாகவும் மறைமுகமாகவும் இரவல்தர மறுத்திருந்தமையே இதற்கு முக்கியமான காரணமாகும் .இப்போது எது கிடைக்கிறதோ அதை வாசிப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றேன் . நல்ல புத்தகம், மோசமான புத்தகம் ,ஆபத்தான புத்தகம் , அலுப்படிக்கும் புத்தகம் , நித்திரையிலாழ்த்தும் புத்தகம் என்ற பாகுபாடெல்லாம் எனக்கில்லை . புத்தகம் என்றால் எல்லாமே புத்தகம் தான். முன்தீர்மானத்தோடு வாசிப்பதை நான் ஒருபோதும் விரும்புவதில்லை .

ஒரு சாரார் சில புத்தகங்களை முக்கியமாக வாசிக்க வேண்டுமென்பார்கள். இன்னும் சிலர் வேறு சில புத்தகங்களை முக்கியமாகப் படித்திருக்க வேண்டுமென்பார்கள். இதற்காகவெல்லாம் விழுந்தடித்து தேடித்திரிந்து வாசிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. அது நல்லதொரு அனுபவமாகவும் அமையச் சாத்தியம் குறைவு . கிடைப்பதை வாசிப்பது எந்தவகையில் நல்லதொரு அனுபவமாகின்றது ? என்ற கேள்வி இயல்பாகவே தோன்றும். மற்றவர் குறிப்பிட்ட புத்தகமொன்றை வாசிக்கத் தயாராகும் போது உங்களுக்கு எதை வாசிக்கப்போகிறோம் என்பது முன்கூட்டியே தெரிந்திருக்கும். அதனால் அவசியமற்ற முற்சார்பு மற்றும் எதிர்பார்ப்புடன் அணுகவேண்டியிருக்கும். கிடைத்ததை வாசிப்பதில் முக்கியமானது நீங்கள் எதை வாசிக்கப்போகிறீர்கள் என்பது உங்களுக்கு அது கையில் கிடைக்கும் வரை தெரிந்திருக்கப்போவதில்லை. இதனால் எந்தவொரு முற்சார்போ ,எதிர்பார்ப்போ உங்களிடமிருக்கப்போவதில்லை .இதைத்தான் நான் முக்கியமாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தநிலையில் குறித்த புத்தகத்தை வாசிக்கும்போதும் வாசித்து முடித்த பின்னும் தோன்றக்கூடிய எண்ணக்கருக்களெல்லாம் சுயமானவை. இங்கே கலப்படமேதுமில்லையென்பதும் சிறப்பான அனுபவமே. எல்லையற்ற வாசிப்பும் மெய்யாகவே இது தான். 'ஒரு விபத்தினைப் போல் உங்களைப் பாதிக்கப்போகும் புத்தகங்களுக்காகக் காத்திருங்கள் 'என்றொரு மேற்கோள் இருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இதை வழமையானதொரு மேற்கோளாகக் கருதி கடந்து சென்றிருப்பீர்கள். இதில் புத்தகங்களுக்காகக் காத்திருங்கள் என்பதுதான் கவனிக்கப்பட வேண்டியதாகும். புத்தகங்களைத் தேடிச்செல்லுங்கள் எனச் சொல்லப்படவில்லை. புத்தகங்களுக்காகக் காத்திருப்பது என்பது எந்தப் புத்தகம் கையில் கிடைக்கின்றதோ அதை வாசிப்பதைக் குறிக்கின்றது. இன்னொரு விதமாகக் குறிப்பிடுவதாக இருந்தால், நீங்கள் புத்தகங்களைத் தேடிச் செல்வதற்குப் பதிலாக, உங்களைத் தேடிவரும் புத்தகங்களை வாசிப்பதாகும் எனச் சொல்லலாம். நான் இப்போதும் எந்தவொரு நிபந்தனையும் இன்றி புத்தகங்களைத் தரக் கூடிய சில நண்பர்களைக் கொண்டிருக்கின்றேன். நான் அவர்களிடம் புத்தகங்களுக்காகச் செல்லும்போது என்ன புத்தகம் தேவை எனக் கேட்கப்படுவதுண்டு. எப்போதுமே நான் அவர்களுக்கு ஏதாவது புத்தகங்களைத் தாருங்கள் என்று ஒரே பதிலைத் தான் நெடுநாள்களாகச் சொல்லி வருகிறேன். நீங்கள் புத்தகங்களைத் தேடிச் செல்வதா? அல்லது புத்தகங்களுக்காக காத்திருப்பதா? என்பதைத் தீர்மானிக்கும் உரிமை முழுமையாக உங்களிடமே இருக்கிறது. எனது நிலைப்பாட்டை உங்களுக்குத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன் அவ்வளவு தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org